# பால போதினி.

## மூன்றாம் புஸ்தகம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6-JAN 1926
MADRAS

ஸ்ரீமதி. லலிதாதேவி
எழுதியது.

---

ரிஜிஸ்தர் செய்தது] 1926 [விலை அணா 4.

...ட்டராமன் & கோ., கும்பகோணம்.

TB
0311 6
N26
178027.

DEDICATED TO
THE CHILDREN OF
THE MOTHER-LAND

# பாடத் திட்டம்.

1. (i) தெய்வ வணக்கம்.

(ii) தேசாபிமானப் பாடல்கள்.

2. (i) கதை எழுத ஆரம்பித்தல்—தெரிந்த வஸ்துக்களை வர்ணித் தெழுதல். உள்ளூர் சம்பந்தமான புராணக்கதைகள்; புராண மேதாவிகளின் சரித்திரம்; நாடகம் நடித்தல்.

(ii) இலக்கணம்—பெயர்ச்சொல், வினைச்சொல்.

3. செய்யுளும் பாட்டும்—நல்வழி முழுதும்—கோவிந்த சதகம், குமரேச சதகம், திருவேங்கட சதகம்; தலைக்கு 3 பாடல்; சமரஸக் கீர்த்தனை—2 கீர்த்தனம்.

4. வாசிப்பு—ஒரு அங்கீகரித்த வாசக பாடமும் ஒரு உப பாடமும்—கையெழுத்துப் பிரதி படித்தலும்.

178027

# முகவுரை.

தஞ்சைஜில்லாக் கல்வி அதிகாரியாயிருந்த ஸ்ரீமான் C. D. சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் ஆதரவின்கீழ் கல்வி உத்தியோகஸ்தர்களால் ஆரம்பப் பாடசாலைகளுக்காக ஒரு பாடத்திட்டம் தயார் செய்யப் பட்டது. அதற்கிணங்க கதைப் புத்தகங்கள் பல பிரசுரமாகியிருக்கின்றன. ஆயினும், மேலும் மேலும் கல்வி அபிவிருத்தியாக வேண்டிய இந்நாட்களில் பிள்ளைகளுக்குத் தேவையான பல புத்தகங்கள் ஏராளமாக இயற்றப்பட்டு உபயோகத்திற்குக் கிடைக்கும்படி செய்வது நமது முக்கிய கடமையாகும்.

"பால போதினி" புத்தகங்கள் புதுமாதிரியாக எழுதப்பட்டவை. கதைகள் சொல்லும் வகையிலேயே பிள்ளைகள் உற்சாகமடையவேண்டும். அதற்குச் சாதனமாக கதைகளுக்கேற்றவாறு ஏராளமானச் சித்திரப்படங்களும், நாடகங்களும் இப்புத்தகங்களிற் காணலாம். தஞ்சைக் கல்விக்காட்சியில் தங்கப் பதக்கம் பெற்றவரும், இப்பாடத்திட்டத்தை தயார்செய்வதில் உதவிசெய்தவருமான ஸ்ரீமான் V. நடராஜ அய்யர் அவர்கள் இப்புத்தகங்களை அச்சிடுவதற்கு முன் பார்வையிட்டு ஆங்காங்கு திருத்திக் கொடுத்து எங்களுக்கு உதவி செய்ததற்கு நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். இப்புத்தகங்கள் வெகுவாக உபயோகப்படும் என்று நிச்சயமாக நம்புகிறோம்.

V. S. வேங்கட்டருமன் & கோ.

# அட்டவணை.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | தோத்திரப் பாடல்கள் | ... | 1 |
| 2. | தேசாபிமானப் பாடல்கள் | ... | 3 |
| 3. | ஏகலைவன் | ... | 5 |
| 4. | முகம்மது நபீ | ... | 8 |
| 5. | ஔவையார் | ... | 10 |
| 6. | மார்க்கண்டேயர் | ... | 11 |
| 7. | மாணிக்க வாசகர் | ... | 14 |
| 8. | பாண்டியன் அணைகட்டியது | ... | 16 |
| 9. | லோகிதாசன் கதை | ... | 19 |
| 10. | நளன் | ... | 24 |
| 11. | திருமங்கையாழ்வார் | ... | 26 |
| 12. | துருவன் | ... | 28 |
| 13. | சாவித்திரி | ... | 30 |
| 14. | பொற்கைப் பாண்டியன் கதை | ... | 32 |
| 15. | இயேசு நாதர் | ... | 35 |
| 16. | ஞான சம்பந்தர் | ... | 37 |
| 17. | மனுச்சோழர் | ... | 39 |
| 18. | சரபோஜி ராஜா | ... | 42 |
| 19. | சகுந்தலை | ... | 44 |
| 20. | தேசிங்கு ராஜன் | ... | 46 |
| 21. | என்னுடையது | ... | 49 |
| 22. | தியாக ஐயர் | ... | 51 |
| 23. | செய்யுட் பாடம் | ... | |
| | 1. கோவிந்த சதகம் | ... | 52 |
| | 2. குமரேச சதகம் | ... | 53 |
| | 3. திருவேங்கட சதகம் | ... | 55 |
| | 4. ஸமரஸக் கீர்த்தனைகள் | ... | 57 |

# உபாத்தியாயர் குறிப்பு.

---

இப்பாடத்திட்டம் மிகவும் அதிகமானது என்பது பலர் எண்ணம். இது உண்மையெனினும், சில வருஷங்களாக நமது கல்விச்சாலைகளில் தமிழ்ப்பாடம் மேலழுந்தியவாருகக் கற்பிக்கப் படுவதால் தற்காலம் நமது ஜனங்களுக்குத் தாய்ப் பாஷையில் ஞானமும் ஆசையும் ஏற்படுவது அரிதாயிற்று. ஆங்கிலம் கற்றுக்கொள்வதில் உள்ள சிரத்தையும் கவனமும்போலத் தமிழ் கற்றுக்கொள்வதில், பிள்ளைகள், பெற்ருேர்கள், உபாத்தியாயர்கள் ஒருவர்களும் அவ்வளவு பிரயாசப்படுவதில்லை. நமது அருமைத் தமிழ் அபிவிருத்தியாகும் பொருட்டு இவ்விதமான ஒரு பாடத் திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு நாம் சிலகாலம் பாடுபடவேண்டும். முதல் வருஷத்தில் இப்பாடத்திட்டம் முழுவதும் நடத்துவது சாத்தியப்படாமலிருக்கும். ஆனுல், சில வருஷங்கள் பாடுபட்டால் பிறகு பலன் கிடைக்கும்.

இப்புத்தகங்கள் படிப்பதின் முக்கிய நோக்கம் பிள்ளைகள் தாம் படித்த கதைகளைத்திருப்பத் தமது சொந்தவார்த்தைகளில் தைரியமாகவும், ஒழுங்காகவும் சொல்லுந் திறமை அடைவது. சொந்தவார்த்தைகள் என்ருல், புத்தகங்களில் உள்ள பதங்களை உபயோகிக்கக்கூடாது என்பதல்ல. புத்தகத்திலுள்ளபடி பிள்ளைகள் மனப்பாடம் செய்து ஒப்பித்தல் கூடாது என்பதே நோக்கமாம். உபாத்தியாயர் சில சமயம் சம்பாஷணையாகவும் நாடகமாகவும் நடிக்கச் செய்வதோடுச் சித்திரங்கள் எழுதச்செய்தும்

பிள்ளைகளை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்கள் கதையில் முக்கியபக்கருத்துக்களை விடாமல் மனதிலுள்ள எண்ணங்களைத் தெளிவாகச் சரியான தொடர் வாக்கியங்களால் அமைத்துச் சொல்லவும் பழக்கவேண்டும். நமது தேசத்தில் தற் காலம் விருத்தியாகிவரும் விவகார முறைகளில் ஜனங்கள் தெளிவாகவும் தைரியமாகவும் பேசவேண்டியது அவசிய மென்பது பெரும்பாலர் கொள்கை. ஆதலின் நமது பிள்ளை களுக்கு இளவயதிலேயே அவ்விதப்பழக்கம் செய்விப்பது வெகு நல்லது.

இப்புத்தகங்களில் உள்ள செய்யுட் பாடங்கள் பாடத்திட் டத்தில் உள்ளவை. வேறு வாசகபுஸ்தகம் நடத்தும் பள்ளிக் கூடங்களில், அதில் அடங்கிய செய்யுட் பாடத்தைவிட்டு இவற்றில் உள்ளதை மாத்திரம் நடத்தலாம். இதில் உள்ள வரிசைக் கிரமமாகத்தான் கதைகள் நடத்தவேண்டுமென்ப தில்லை. உபாத்தியாயர் சமயோசிதம் போல செய்து கொள்ளலாம்.



# பால போதினி

## மூன்றும் புஸ்தகம்

## 1. தோத்திரப் பாடல்கள்.

### விநாயகர்.

1\. நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக் குரியானை வழுத்துவாம்.

### சரவ்ஸ்வதி.

2\. வெண்டாமரைக் கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ ஜகமேழு மளித்(து)
உண்டானுறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கு வணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலா வல்லியே.

### சுப்பிரமணியர்.

3\. நாதவிந்து கலாதி நமோநம, வேத மந்த்ர ஸ்வரூபா நமோநம,
ஞான பண்டித ஸ்வாமி நமோநம—வெகு கோடி
நாம சம்பு குமாரா நமோநம, போக ஸுந்தரி பாலா நமோநம,
நாக பந்தம யூரா நமோநம—பர சூர

சேத தண்ட விநோதா நமோநம, கீதகிங்கிணிபாதா நமோநம,
தீர ஸம்ப்ரம வீரா நமோநம—கிரி ராஜ
தீப மங்கள ஜோதி நமோநம, தூய அம்பல லீலா நமோநம,
தேவ குஞ்சரி பாகா நமோநம—அருள் தாராய்;
ஈதலும் பல கோலால பூஜையும், ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமுங் குரு ஸ்ரீபாத ஸேவையும்—மறவாத
ஏழ்தலம்புகழ் காவேரியால் விளைசோழமண்டலமீதே மநோ
ராஜ கம்பிர நாடாளு நாயக—வய லூர! [கர,
ஆதரம்பயி லாரூரர் தோழமை, சேர்தல் கொண்டவரோடே
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி—லையி லேகி [முறைினில்
ஆதியந்த உலா ஆசு பாடிய சேரர் கொங்குவை காவூர்நனை
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள்—பெருமாளே! [தில்

## தேவாரம்.

4. பித்தா! பிறை சூடீ! பெருமானே! அருளாளா!
எத்தால் மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெ நல்லூரருள்
அத்தா! உனக்காளாய் இனியல்லே னெனலாமே? [துறையுள்

## திருவாசகம்.

5. வானாகி மண்ணாகி *வளியாகி வெளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு—
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

* வளி—காற்று.

## திருவாய்மொழி.

(நீலாம்புரி இராகம்).

6. மன்னுபுகழ்க் கௌஸலைதன் மணிவயிறு வாய்த்தவனே !
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே ! இராகவனே ! தாலேலோ.

## பெரிய புராணம்.

7. உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருவருட்பா.

8. மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாணிக்கமே! சுடர் வண்ணக் கொழுந்தே !
*கூற்றறியாத பெருந் தவ ருள்ளக்
கோயிலிருந்த குணப் பெருங் குன்றே !
வேற்றறியாத சிற் றம்பலக் கனியே !
†விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே !
சாற்றறியாத என் சாற்றங் களித்தாய்
தனிநடராஜ ! என் சற்குரு மணியே !

---

# 2. தேசாபிமானப் பாடல்கள்.

---

உலகிற் சிறந் தொளிர்வ தெங்கள் நாடே—பல
உண்மைகள் தோன்றிய தெங்கள் நாடே
தத்துவக் கலையுள்ளதும் எங்கள் நாடே—நல்ல
தாபதர் வதிந்ததும் எங்கள் நாடே

---

* கூற்று—யமன் ; † விச்சை—வித்தை ; அறிவு.

செந்தமிழ் வளர்வதும் எங்கள் நாடே—வெகு
சிவஸ்தல மன்னுவதும் எங்கள் நாடே
வைணவ ஸ்தலமுள்ளதும் எங்கள் நாடே—உயர்
வானவர் போற்றுவதும் எங்கள் நாடே
பங்கஜத் தடமுள்ள தெங்கள் நாடே—தமிழ்ச்
சங்கம் தழைத்ததும் எங்கள் நாடே
கங்கை பரவுவ தெங்கள் நாடே—திருக்
காவேரி சூழுவது மெங்கள் நாடே
சேரர்க ளாண்டதும் எங்கள் நாடே—நல்ல
சோழர்களாண்டதும் எங்கள் நாடே
காண்டற்கினியதும் எங்கள் நாடே—தமிழ்ப்
பாண்டியர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
வாணிகம் வளர்ந்ததும் எங்கள் நாடே—திரு
வள்ளுவர் பிறந்ததும் எங்கள் நாடே
கப்பல்கள் கட்டிய தெங்கள் நாடே—நீதிக்
காவியம் நிறைந்துள தெங்கள் நாடே
கைத்தொழில் கண்டதும் எங்கள் நாடே—கொடைக்
காவலர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சிற்பஞ் சிறந்ததும் எங்கள் நாடே—தரும்
கற்பதரு வென்பதும் எங்கள் நாடே
பைம்பொன் விளைவதும் எங்கள் நாடே—அரும்
கம்பன் பிறந்ததும் எங்கள் நாடே
அருட்கிடமாவதும் எங்கள் நாடே—பெரும்
அடியவர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சித்தர்க ளுதித்ததும் எங்கள் நாடே—மிகச்
சிறந்த மருந்துள தெங்கள் நாடே
நெசவுத் தொழிலுடைய தெங்கள் நாடே—நல்ல

நேசம் விளைப்பதும் எங்கள் நாடே
உண்ணும் பொருளுடைய தெங்கள் நாடே—வீரக்
கண்ணகி தோன்றிய தெங்கள் நாடே
ஒளவையார் வளர்ந்ததும் எங்கள் நாடே—சுய
அரசு பெறுவதும் எங்கள் நாடே
சாந்தம் பொருந்தியதும் எங்கள் நாடே—ஐந்தாம்
ஜார்ஜரசாள்வதும் எங்கள் நாடே
தஞ்சைத்தலை தலைநகர் எங்கள் நாடே—மகிழ்
தாண்டவ மாடுவதும் எங்கள் நாடே.

---

## 3. ஏகலைவன்.

---

ஆதிகாலத்தில் துரோணர் என்று ஒரு குரு இருந்தார். அவர் அநேக சீஷர்களுக்குப் பாடம் கற்றுக்கொடுத்தார். அக்காலத்தில் பாடம் படிப்பது என்றால் சாதாரணமாக எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வது மாத்திரம் அல்ல. பிள்ளைகள் வில் பிடித்து, அம்புவிட்டு சண்டை செய்யவும் கற்றுக் கொள்வார்கள். குருவினிடம் பயபக்தியுடன் பழகி நல்லொழுக்கம் பெறுவார்கள்.

துரோணரிடம் சீஷர்களா யிருந்தவர்களில் அர்ச்சுனன் மிகவும் சமர்த்தன். அவன் இரண்டு கைகளினாலும் அம்புகள் விடுவான். அவன் குறி வைத்து அடித்தால் ஒரு போதும் தப்புவதில்லை. ஆகவே, அர்ச்சுனன் தன்னைப்போல சமர்த்தன் இல்லை என்று சில சமயம் எண்ணிக்கொள்வான்.

ஒருநாள் ஏகலைவன் என்ற ஒரு வேடப்பையன் துரோணரிடம் வந்து தனக்கும் வித்தை கற்பிக்கும்படி வேண்டினான். அவர் வேடனுக்குக் கற்

றுக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆனால், அவனே தான்வில்வித்தையைத்துரோணரிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டான். தன் மனதில் துரோணர்தாம் குருவென எண்ணினன். அவரைப்போல ஒரு பிரதிமை செய்து வைத்தான். தினந்தோறும் அந்தப் பதுமையிடம் உட்கார்ந்து வில்வித்தையை பழகிக் கொள்வான். அவனுடைய குருபக்தியைக் கண்டு கடவுளும் அவனுக்கு வித்தை வருப்படி செய்தார். இவ்விதமாக அர்ச்சுனன் கற்றுக் கொண்டதையெல்லாம் ஏகலைவனும் தெரிந்து கொண்டான்.

ஒருநாள் ஏகலைவன் வசித்த காட்டில் அர்ச்சுனன் வேட்டையாடி வந்தான். அர்ச்சுனனுடைய நாய் அங்குமிங்கும் ஓடினது. துரோணரது பிரதிமையை முகந்து பார்த்து அசுத்தம் செய்தது. ஏகலைவன் கோபித்து அந்நாயின் மேல் ஒரு அம்பை எய்தான். நாய் சூலைத்துக் கொண்டு அர்ச்சுனனிடம் ஓடி வந்தது. அர்ச்சுனன் நாயின் தேகம் முழுவதும் பார்த்து ஆச்சரியப் பட்டான். இவ்வளவு சாமர்த்தியமாக அம்பு எய்தவன் இக்காட்டில்யார் இருப்பான் என்று தேடிப் போனன். அங்கு, துரோணர் உருவத்தைக் கண்டு



இன்னும் ஆச்சரியப்பட்டான். உடனே திரும்பிச் சென்று தன் குருவாகிய துரோணரை அழைத்து வந்தான்.

துரோணர் வருவதை ஏகலைவன் பார்த்தான். ஓடிவந்து அவரை நமஸ்கரித்து உபசாரம் செய்தான். உண்மையான குருபக்தியினால் அவர் உருவத்தின் எதிரில் தானாகவே எவ்வளவு வித்தை கற்றுக்கொண்டான், ஏகலைவன்! இவ்வேடனுடைய ஆழ்ந்த குருபக்தியை அர்ச்சுனன் கண்டான். "சீ! நான் என்னவோ பிரமாதமாக என்னைப்பற்றி நினைத்திருந்தேனே!" என்று தலை குனிந்து நின்றான். துரோணர் இன்னமும் ஏகலைவனது மேன்மைக் குணத்தைக் காட்ட நினைத்தார். உடனே "அப்பா! குருதக்ஷிணை கொடாவிடில் கற்றவித்தை பூரணமாகாது. ஆதலால் உனது வலதுகைப் பெருவிரலைக் கொடு." என்றார். ஏகலைவன் பெருமகிழ்ச்சி அடைந்தான். உடனேதன் கைக்கட்டைவிரலைவெட்டிக்கொடுத்து நமஸ்காரம் செய்தான். வலதுகைப் பெருவிரல்தான் வில்நாணை இழுத்து அம்பை விடுவதற்கு மிகவும் அவசியமானது. குருபக்தியே பெரிது என்று நினைத்திருந்ததால் ஏகலைவனுக்கு அந்த எண்ணமே உண்டாகவில்லை. அர்ச்சுனனும் ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டான்.

இவ்வித சிஷனைக் கண்டு துரோணர் ஆசீர்வதித்துப் பகவானைத் துதிசெய்தார். ஏகலைவன் தன் கைவிரலைத் திரும்பவும் அடையச் செய்தார். குருவின் ஆசீர்வாதம் பெற்ற ஏகலைவன் சுகமாக வசித்திருந்தான்.

# 4. முகம்மது நபீ.

நமது தேசத்தில் உள்ள ஜனங்கள் பலர் ஹிந்து மதத்தினர். ஆனால் சிலர் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்கள். நமது தேசத்து முகம் மதியர்களும் ஹிந்துக்களும் சேர்ந்து இந்திய ஜனங்கள் எனப்படுவர்.

முகம்மதியர்களுக்குப் புண்ணிய க்ஷேத்திரம் மெக்கா. இந்த ஊரில்தான் முகம்மது நபீ அவர் கள் முதல் முதல் ஜனங்களுக்குப் போதிக்க ஆரம் பித்தார். மெக்கா நமது தேசத்திற்கு மேற்கே உள்ளது.

முகம்மது நபீ யவர்கள் சுமார் 1400 வருஷங் களுக்கு முன் பிறந்தார். பாலியத்திலேயே தாய் தந்தையரை இழந்துவிட்டார். பிறகு கடிஜா என்னும் ஒரு பணக்கார ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டார். அவர் எப்போதும் கடவு ளைப்பற்றி யோசித்துக்கொண்டு இருப்பார். சூரிய அஸ்தமன சமயம் அவருக்கு மிகவும் ஆனந்தமா யிருக்கும். அப்போது அவர் பகவானைத்தரிசித்துத் தோத்திரம் செய்வார்.

அராபிய ஜனங்களுக்கு முகம்மது உபதே சித்ததாவது:—மதுபானம், பொய், திருட்டு முத லியவைகளை ஒழிக்கவேண்டும். ஜனங்கள் மேன் மை தாழ்வு இல்லாமல் சமமாயும் சமாதான மாயும் வசிக்கவேண்டும். ஜீவப் பிராணிகளிடத்தில் இரக்கங்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் பணம் உதவியில் வட்டி வாங்கக்கூடாது என்பது. ஆனால் அவர்கள் முகம்மது சொல்வதை நம்ப

வில்லை. அவரை ஊரைவிட்டு விரட்டினர்கள். முகம்மது சில நண்பர்களுடன் மெக்காவைவிட்டு ஓடிப்போனர். விரோதிகள் அவரைத் தேடித் திரிந்தனர். முகம்மது வெகு கஷ்டப்பட்டார். சில வருஷங்களுக்குப் பிறகு அவரது சீஷர்கள் அதிக மாயினர். அப்போது திரும்பவும் மெக்காவுக்கு வந்து தம் விரோதிகளை ஜயித்தார்.

முகம்மது தமது 80-ஆவதுவயதில் இறந்து போனர். அவர் இறக்குமுன் தமது சீஷர்களை அழைத்தார். தாம் போதித்த விஷயங்களை உலக மெங்கும் அறிவிக்கும்படி சொன்னர். அவர் உப தேசங்கள் அடங்கிய கிரந்தம் கொரான்எனப்படும்.

முகம்மது நபியவர்களைப்பற்றி பல கதைகள் சொல்வதுண்டு. ஒரு சமயம் அவர் தம் விரோதி களுக்குப் பயந்து ஒரு மலைக் குகையில் ஒளிந் திருந்தார். அவருடன் ஒரு சீஷர் மாத்திரம் இருந்தார். விரோதிகள் பலர் விரட்டி வருவதைக் கண்டு சீஷர் பயந்து, "நாம் இருவர்தாமே இருக் கிறோம்" என்று சொன்னர். ஆனல் முகம் மது "இருவர் அல்ல. நம்முடன் இன்னொருவர் இருக்கிறர். அவர் பலத்தால் நாம் தைரியமாய் இருப்போம். அவர் தாம் கடவுள்" என்றார். சற்று நேரத்திற்கெல்லாம் விரோதிகளிற் சிலர் அக்குகை வாயில் அருகே வந்தனர். "அக்குகைக்குள் சென்று தேடுவோம்" என்று ஒருவன் சொன்னன். ஆனல் அக்குகைவாயிலில் ஒரு சிலந்தி கட்டிய நூல் வலை கலையாமல் இருந்தது. அதை இன்னொருவன் காட்டினன். "இது கலையாமல் இருப்பதால் இதன் வழியே ஒருவரும் போயிருக்கமாட்டார்

கள்" என்ருன். உடனே அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். பிறகு முகம்மது தம் சீஷரிடம் "பார்த்தாயா? கடவுள் நம்மை ஆச்சரியமாகக் காப்பாற்றினுர்" என்று சொன்னுர். அவரும் அவர் சீஷரும் ஆண்டவனைத் தொழுதார்கள்.

முகம்மது நபீயவர்கள் மெக்காவிலிருந்து ஓடின வருஷம் முக்யமான வருஷம். அதற்கு ஹிஜிரா என்று பெயர். அதுமுதல் முகம்மதியர்கள் வருஷம் கணக்கு இடுகிருர்கள்.

## 5. ஒளவையார்.

நீங்கள் ஆத்திச்சூடிபாடம் படித்தீர்கள் அல்லவா? அப்பாடம் எழுதியவர் ஒளவையார்.

ஒரு சமயம் அவர் வழி நடந்த களைப்பால் ஒரு நாவல் மரத்தடியில் உட்கார்ந்தார். அம்மரத்தின்மேல் ஒரு பையன் நாவற் பழம் தின்று கொண் டிருந்தான். ஒளவையார் தமக்கும் சில பழங்கள் பறித்துப்போடும்படி கேட்டார். உடனே அப்பையன். "பாட்டி! சுடும் பழம்வேணுமா, சுடாப் பழம் வேணுமா?" என்ருன். நாவற்பழங்களில் சுடும் பழம் என்றும் சுடாப் பழம் என்றும்



உண்டோ என்று ஔவை ஆச்சரியப் பட்டார். "எனக்குத் தாகமாயிருக்கிறது. சுடாப்பழம்போடு" என்று சொன்னர். பையனும் மரக் கிளைகளை உலுக்கினன். பழங்கள் கீழே உதிர்ந்தன. ஔவை எழுந்து, நல்ல பழுத்த பழங்களாகப் பொறுக்கினுள். அப்பழங்களில் மண் ஒட்டிக்கொண் டிருந்தது. பாட்டியும் அம்மண் போகும்படி ஊதினர். இதைப் பார்த்த பையன், "பாட்டி! சுடும்பழத்தை எடுத்து ஊதுகிருயே! சுடாப்பழம் அல்லவா கேட்டாய்! என்ருன். ஔவையார் "அடடா! இதுவரையில் சுடும்பழமென்ருல் பழமென்றும் சுடாப் பழமென்ருல் காயென்றும் தெரியாமல் போயிற்றே." என்று வெட்க மடைந்தார். அப் பையன் புத்தியை அவர் மெச்சிக் கொண்டார்.

அப்பையன் சாதாரணப் பையன் அல்லன். சுப்பிரமணிய சுவாமி இவ்விதம் பையனுக வந்தார். அவர் ஔவையாரைச் சில பாடல்கள் பாடும்படி கேட்க, அவரும் பாடினர். அப்பாடல்கள் என்னவென்று மேல்வகுப்பில் நீங்கள் படிக்கலாம்.

## 6. மார்க்கண்டேயர்

தஞ்சை ஜில்லாவில் திருக்கடையூர் என்று ஒரு சிவஸ்தலம் இருக்கிறது. அந்த ஊரில்


அநேகவருஷங்களுக்குமுன் மார்க்கண்டன் என்று ஒரு சிறுவன் கடவுளின் அருளினுல் எப்பொழுதும் ஜீவித்திருக்க வரம் பெற்ருன். மார்க்கண்டர் எப்போதும் சிரஞ்சீவியாக இருக்கிருர் என்று நாம் சொல்கிறேம்.

அவர் பிதாவின் பெயர் மிருகண்டு. அவர் புத்திரன் இல்லாமல் வெகுநாள் சுவாமியை வேண்டி இருந்தார். ஒருநாள் சுவாமி அவர் முன் தோன்றி "நூறுவயது உள்ள துஷ்டப் புத்திரர்கள் பலர் வேண்டுமா? அல்லது பதினுறு வயது உள்ள நல்ல புத்திரன் ஒருவன் வேண்டுமா?" என்று கேட்டார். சற்புத்திரனே வேண்டுமென்று மிருகண்டு கேட்டுக்கொண்டார். அவ்வாறே மிருகண்டுவுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு மார்க்கண்டன் என்று பெயரிட்டுச் செல்வமாக வளர்த்து வந்தார்கள். மார்க்கண்டன் சிறுவயதுமுதல்தினந்தோறும்பகவானைப் பூஜித்து வந்தான். தனக்குப் பதினுறு வயதுதான் ஆயுள் காலம் என்று அறிந்து கொண்டான். தன்னுடைய சொல்ப ஆயுள் காலத்துக்குள் முக்கிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து வரவேண்டுமென்று ஆவல் கொண்டான்.

அவ்வாறே தன் பெற்றேர்களிடம் அனுமதிபெற்றுப் பல ஊர்களுக்குச் சென்ருன். சுவாமி

யைத் தரிசித்து மகிழ்ந்தான். கடைசியாகத் திருக்கடையூர் வந்து சேர்ந்தான். அவன் ஆயுட்காலமும் முடிவாகும் சமயமாயிருந்தது. அவன் சுவாமியைப்புஷ்பங்களால் பூஜைசெய்தான். அவரைத் தோத்திரம் செய்துகொண் டிருந்தான். அச்சமயம் அவன் உயிரைக்கொண்டுபோகும் பொருட்டு எமன் வந்தான். இவன் சிறந்த பக்தனானதால் எமன் வந்தது இவன் கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்தது. எமனைக் கண்டு மார்க்கண்டன் பயந்தான். சுவாமியைக் கட்டிக்கொண்டான். எமன் கோபித்து தன்னிடமிருந்த பாசக்கயிற்றை மார்க்கண்டன் பேரில் வீசினான். மார்க்கண்டனையும் அவன்கட்டிக்கொண்டிருந்த சுவாமியையும் இழுத்தான். இவ்வளவு பக்தியுள்ள மார்க்கண்டனைக்காப்பாற்ற வேண்டுமென்று சுவாமி எண்ணினார். உடனே சுவாமி எதிரில் தோன்றினார். எமனைக் கோபித்து விரட்டினார். பகவான் பக்தர்களை எவ்விதத்திலும் காப்பாற்றுவார். மார்க்கண்டர் அன்று முதல் எப்பொழுதும் பதினாறு வயதுள்ளவராய், சுவாமியை பக்திசெய்து கொண்டு சந்தோஷமாக இருக்கிறார்.





# 7. மாணிக்கவாசகர்.

மதுரை என்னும் பட்டணத்தில் பாண்டியன் அரசாண்டு வந்தான். அவனிடம் வாதவூரர் என்று ஒரு மந்திரியிருந்தார். அவர் மிகவும் படித்தவர். தெய்வ பக்தி உள்ளவர். அவருடைய பக்தி அதிகப்பட்டு உண்மையான ஞானம் ஏற்பட்டது. அவர் கடவுளுக்குப் பணிவிடை செய்வதில் ஏராளமான திரவியத்தைச் செலவழித்தார்.



ஒரு சமயம் அரசன் வாதவூரரிடம் குதிரைகள் வாங்கி வரும்படி பணம் கொடுத்து அனுப்பினான். வாதவூரர் பணத்தை எடுத்துக் கொண்டு கிழக்குக் கடற் கரையிலுள்ள ஊருக்குப் போனார். அங்கே தமக்கு உபதேசம் செய்ய ஒரு தகுந்த குருவைக் காண விரும்பினார். அவர் எண்ணியபடி சிவபெருமான் ஒரு யோகீசுவரர் போல் எதிரில் தோன்றினார். அவரைக் கண்டதும் வாதவூரர் ஆனந்தமடைந்து அவரை நமஸ்கரித்து நின்றார். குருவும் அவருடைய தெய்வபக்தியை மெச்சி அவருக்கு உபதேசம் செய்து மறைந்தார். தமக்கு உபதேசம் செய்தவர் பரமசிவன் தான் என்று வாதவூரர் அறிந்து கொண்டார். தம்மை மறந்து பகவானைத் துதித்துப்பாடினார். அவர் பாடல் மாணிக்

கம்போல் சிறப்பாயிருந்தன. ஆதலின் அவருக்கு மாணிக்கவாசகர் எனப்பெயர் ஏற்பட்டது.



குதிரைவாங்க வந்ததை வாதவூரார் மறந்தார். தாம் கொண்டுவந்த பணத்தை எல்லாம் செலவு செய்து ஒரு பெரிய கோவில் கட்டினர். அவர் கட்டிய கோவிலுக்கு ஆவுடையார்கோவில் எனப் பெயர். இவ்விதம் பணத்தைச் செலவுசெய்ததைப் பாண்டியராஜன் அறிந்தான். வாதவூரரைப் பிடித்துவரும்படி சேவர்களை அனுப்பினன். சேவ

கர்கள் வாதவூரரைக் கண்டு அரசனிடம் வரும் படி அழைத்தார்கள். சிவபக்தர் இன்னது செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருடைய கனவில் சுவாமி தோன்றி “ நீ போய்ச்சேர். குதிரைகள் வந்து சேரும்” என்று சொன்னார்.

வாதவூரர் மதுரைக்குச் சென்றார். அரசனிடம் குதிரைகள் வந்துசேரும் என்று சொன்னார். ஆனால் பலநாட்கள் ஆகியும் குதிரைகள் வரவில்லை. அரசன் வாதவூரரைச் சிறையில் அடைத்து இம்சை செய்தான்.

சுவாமியும் தன் பக்தனைக் காப்பாற்ற எண்ணினார். உடனே காட்டில் இருந்த நரிகளை எல்லாம் அழகிய குதிரைகளாகச் செய்தார். அவைகளை ஓட்டிக்கொண்டு தாம் ஒரு குதிரை வியாபாரியாகப் பாண்டியன் முன் வந்தார். “நான் இக்குதிரைகளை வாதவூரரின் கட்டளைப்படி கொண்டுவந்திருக்கிறேன்” என்று சொன்னார்.

பாண்டிய ராஜன் குதிரைகளின் அழகைக் கண்டுமகிழ்ந்தான். சேவகர்கள் குதிரைகளை லாயத்தில் கொண்டுபோய்க் கட்டினார்கள். குதிரை வியாபாரியாகிய சுவாமி திரும்பிப்போனார். வாதவூரரும் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

---

## 8. பாண்டியன் அணைகட்டியது.

மறுநாள் குதிரைகள் முன்போலவே நரிகளாகி ஊளையிட்டன. அதைக்கண்ட பாண்டியராஜன் வாதவூரரின் பேரில் கோபித்துக்

கொண்டான். சேவகர்கள் நரிகளை காட்டிற்கு அடித்துத் துரத்திவிட்டார்கள். மறுபடியும் வாதவூரரைச் சிறையில் இட்டு மிகவும் கஷ்டப்படுத்தினான்.

தம் அன்பான பக்தன் அவதிப்படுவதை பகவான் அறிந்தார். பாண்டியனுக்குப் புத்திவரும்படி செய்ய எண்ணினார். உடனே வைகை யாற்றில் வெள்ளம் பெருகிவரும்படி செய்தார். பட்டணத்திற்குள் ஜலம் ஓடிவந்தது. அரசன் என்ன செய்வான்! எல்லா ஜனங்களையும் கூப்பிட்டு அணை கட்டும்படி உத்தரவு அளித்தான். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு ஆள் வீதம் அனுப்பச் சொன்னான்.

மதுரையில் ஒரு ஏழைப் பெண்பிள்ளை இருந்தாள். அவள் பிட்டுச் சமைத்து விற்று ஜீவனம் செய்பவள். அவளுக்கு உறவினர் ஒருவருமில்லை. அவள் பங்குக்கு ஆள் ஒருவரும் அனுப்பவில்லை. கூலி கொடுக்கவும் அவளிடம் பணம் இல்லை. அரசன் என்ன செய்வானோ என்று அவள் பயந்து இருந்தாள். சுவாமியும் ஒரு கூலியாள் போல வேஷம்பூண்டு வந்தார். “உனக்காக வேலை செய்கிறேன் என்ன கூலி கொடுக்கிறாய்?” என்று அக்கூலியாள் கேட்டான். அவள் உடனே அவனுக்கு நிறையப் பிட்டு கொண்டுவந்து கொடுத்தாள்.

அவள் கொடுத்த பிட்டை அக்கூலியாள் வாங்கிக் கொண்டான். மற்ற ஆட்கள் வேலைசெய்யும் இடத்திற்கு வந்தான். அவர்கள் கூடைகூடையாகமண்கொண்டு போய்க் கொட்டிக் கொண் டிருந்தார்கள். அவர்களைக் கூப்பிட்டு அவன் பிட்டு அள்ளிக் கொடுத்தான். வேலை செய்யாமல் அவன் வம்பு பேசிக்கொண்டு இருந்தான். வெள்ளமோ



அதிகமாகிறது. அந்தக் கூலியாள் வேலைசெய்யாமல் இருப்பதை அரசன் பார்த்துக் கோபித்தான். அவனைப்பாண்டியன் தன் கைப் பிரம்பினுல் முதுகில் தட்டினுன். உடனே அக்கூலியாள் ஒரு கூடை மண்ணைக் கொட்டிவிட்டு மறைந்து போனுன். அவன் முதுகில் விழுந்த அடி அங்கு இருந்த ஒவ்வொருவர் முதுகிலும் விழுந்தது. அவன் கொட்டின மண்ணினுல் அணைகட்டி முடிந்தது. வைகை யாற்றின் வெள்ளமும் நின்று போயிற்று.

பாண்டியராஜன் மிகவும் ஆச்சரியப்பட்டான். சுவாமி அரசனுக்குப் பிரசன்னமாகி, "நமது அன்பனை நீ மிகவும் உபத்திரவப் படுத்தினுய். அதற்

காக இவ்விதம் செய்தோம்" என்று சொன்னார். உடனே அரசன் வாதவூரரைச் சிறையினின்றும் விடுவித்தான். அவரை உபசரித்து வணங்கினான். தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். வாதவூரர் பகவானது விளையாட்டை வியந்து தோத்திரம் செய்தார்.

மதுரை சுவாமியின் பெயர் சுந்தரேசர். அவர் இவ்விதம் பல சமயங்களில் தம் பக்தர்களைக் காப் பாற்றியிருக்கிறார். அவ்விஷயங்களை விபரமாக திருவிளையாடல் புராணத்திற் படிக்கலாம்.

## 9. லோகிதாசன் கதை.

நமது தேசத்தில் காசி என்னும் ஊர் மிக வும் முக்யமானது. அது கங்கா நதிக்கரையில் இருக்கிறது. அந்த ஊரில் பல வருஷங்களுக்கு முன் காலகண்டர் என்று ஒரு பிராமணர் இருந் தார். அவர் ஒருநாள் ஏராளமாகப் பொன்கொடுத்து தம் வீட்டிற்கு வேலை செய்ய ஒரு பெண் பிள்ளை யையும் அவள் மகனையும் விலைக்கு வாங்கிவந்தார். அவளுடன் அவள் பிள்ளையும் வேலை செய்ய வேண்டும். அவள் பெயர் சந்திரமதி; அப் பிள்ளை யின் பெயர் லோகிதாசன். அரிச்சந்திரன் என்ப வன் தன்மனைவியையும் தன் மகனையும் இவ்விதம் பணத்திற்கு விற்றுவிட்டான்.

தினந்தோறும் காலகண்டர் வீட்டில் உள்ள பல வேலைகளைச் சந்திரமதியும் அவள் பிள்ளை யும் செய்வார்கள். ஐயோ பாவம்! அவள் இவ் விதமான கடின வேலைகள் செய்து வழக்கமில்லை.

வீடுகூட்டிமெழுகுவதும், துணிகள் துவைப்பதும், நெல் குத்துவதும் அவள் செய்து அறியாள். "பகவானே! இவ்விதம் கஷ்டகாலம் வருமா?" என்று வருந்துவாள். ஆயினும் மிகவும் பொறுமையுடன் எல்லா வேலைகளும் செய்வாள். தன் தலைவிதியை நொந்துகொண்டு முகத்தை கடுகடு என்று வைத்துக் கொள்வதில்லை. தன் மகனுக்கு எப்போதும் சலிப்பு ஏற்படாமல் சந்தோஷமாக இருக்கும்படி புத்தி சொல்வாள்.

இந்த சந்திரமதி இந்த வேலைக்கு வருவானேன்? ஒரு வேலையும் செய்தறியாத அவளுக்கு இந்த கதி ஏன் வந்தது? அதுதான் நாம் எல்லாரும் ஆச்சரியப்படும்படியான விஷயம்.

ஒருநாள் காலகண்டர் உத்திரவுப்படி லோகிதாசன் தர்ப்பை கொண்டுவரக் காட்டிற்குச் சென்றான். அவனுடன் இன்னும் பல வாலிபர்களும் போயினர். "ஏண்டா! லோகிதாசா! நீ போன வருஷம் எங்கேடா இருந்தாய்? இவர்கள் வீட்டிற்கு ஏன் வந்தாய்?" என்று ஒருவன் கேட்டான். லோகிதாசன் "நண்பா! எனக்கு விபரமாக ஒன்றும் தெரியாது. என் தாயார் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒருவருக்குப் பணம்கொடுப்பதாக என் பிதா வாக்கு அளித்தார். அதன்படி கொடுக்க முடியவில்லை. அதற்காக என் மாதாவையும் என்னையும் விற்றுப் பணம் அடைந்தார்" என்றான்.

இன்னொருவன் "இது என்ன வேடிக்கை! எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்?" என்று கேட்டான். லோகிதாசன் "எனக்குத் தெரியாது. ஆனால் என் பிதாவும் ஒருவரிடம் வேலைக்குப்

போயிருக்கிறார். அந்தப் பணமும் சேர்த்துக் கொடுத்தார்" என்றான்.

தோழன் "பணம் கொடுக்க முடியாவிட்டால் இல்லை என்று சொல்லிவிட்டால் போகிறது."

லோகிதாசன் "என் பிதாவிடம் ஒருவர் ஏராளமான பொருள் கொடுத்து வைத்தார். அதை மறந்து என் பிதா தம் பொருளுடன் அதையும் சேர்த்து தானம் செய்துவிட்டார். தம்மிடம் கொடுத்து வைத்த பொருளை இல்லை என்று சொல்ல என் பிதா இஷ்டப்படவில்லை."

தோழன்:—போடா! பைத்தியக்காரா! அப் பொருளுக்காக உன்னை யெல்லாம் வேலை செய்யும்படி விற்றார்களா?

லோகிதாசன்:—ஆம்! என் பிதா செய்ததே சிறந்தது; 'என்னிடம் பொருள் கொடுக்கவில்லை என்று சொல்லிவிடு: அது போதும்' என்று என் பிதாவிடம் அவர்கள்கூடச் சொன்னார்களாம். ஆனால் அவர் உண்மையினின்றும் பிசகமாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தார்.

தோழன்:—அதனால் என்ன லாபம்? இதோ நீங்கள் வேலைசெய்து தவிக்கிறீர்கள்?

லோகிதாசன்:—சூரியனும் சந்திரனும் அழியாமல் தினந்தோறும் நமக்கு வெளிச்சம் கொடுக்கும். அதுபோல சத்தியமும் அழியாமல் நம்மை எப்போதும் காத்து நிற்கும்.

தோழன்:—நீ ராஜா மகன். சுகமாக அரண்மனையில் இருக்கவேண்டும். இப்படி எங்களுடன் வந்து திண்டாடும்படி விதியிருந்தது. சத்தியத்தினால் வந்த லாபம்!

லோகிதாசன்:—இவை எல்லாம் துன்பமா? உங்களுடன் சந்தோஷமாகவே நானும் இருக்கிறேன்.



இவ்வாறு பேசிக் கொண்டு பிள்ளைகள் தர்ப்பைப் புல் மிகுதியாக வளர்ந்த காட்டில் நுழைந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம், "அம்மா" என்று அலறிக்கொண்டு லோகிதாசன் கீழே விழுந்தான். மற்ற பிள்ளைகள் ஓடி வந்து பார்த்தார்கள். ஒரு சர்ப்பம் லோகிதாசனைக் கடித்து விட்டது என அறிந்தார்கள். உடனே அவர்கள் வீட்டிற்குச் சென்று சந்திரமதியிடம் சொன்னார்கள். அவள் எஜமானரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு பிள்ளை இறந்துகிடக்கும் இடத்திற்குப் போனாள். அவனைப் பார்த்து வெகுநேரம் அழுதாள். பிறகு அப்பிணத்தைத் தகனம் செய்ய எடுத்துப்போனாள்.

கடவுள் அன்பு மிகுந்து லோகிதாசனைப் பிழைக்கும்படி செய்தார். அவன் மாதா பிதாக்

களுக்கு மிகுந்த செல்வம் கொடுத்தார். பிறகு அவர்கள் சுகமாக வசித்திருந்தனர்.

---

உபாத்தியாயருக்கு:—எப்படி சத்தியம் இவர்களைக்காப் பாற்றியது என்ற விஷயத்தை மேலும் விவரித்துச் சொல்லவும். பிள்ளைகளுக்கு அபரிமிதமான பேர்களையும் சம்பவங்களையும் சொல்லி, அவர்கள் மறந்து போவதைவிட, சில முக்ய சம்பவங்களை மாத்திரம் சுருக்கமாகச் சொல்வது நல்லது. உதாரணமாக இக்கதையை தொடர்ச்சியாகக் கொண்டு போவதைவிட "லோகிதாசன் உயிர்பெற்றது" என்ற இன்னொரு கதை சொல்வது நலம். அதில் சந்திரமதி தன்பிள்ளையைத் தகனம்செய்ய முயன்றதும், மயானத்தைக் காவல்செய்யும் ஆள் அரிசியும் பணமும் கேட்டதும், பிறகு இருவரும் ஒருவரையொருவர் அறிந்து கொண்டதும், பணத்திற்காகத்திரும்பிவந்த சந்திரமதி வழியில் ஒரு குழந்தையின் பிரேதத்தைக்கண்டு அதை எடுத்து பரிதவிப்பதும், அக்குழந்தையைத் தேடிவந்த சேவர்கள் இவள்தான் கொன்றுவிட்டாள் என்று சாதிப்பதும், அவளைக் கொன்றுவிடும்படி அரசன் உத்தரவளிப்பதும், மயான காவல்காரனாகிய அரிச்சந்திரனே தன் மனைவியை வெட்டும்படி நேர்ந்த அதிசயமும், அவன் யாதொரு சஞ்சலமுமின்றிப் பகவானைத் துதித்த வண்ணம் அவளை வெட்டுவதற்கு கத்தியை ஓங்க பகவான் பிரசன்னராகி அவர்களைப் பாதுகாப்பதும் ஆன இவ்விஷயங்கள் சொல்லவேண்டும். ஒருபொய் சொல்லுவதற்கு ஒப்புக்கொள்ளாமல் அரிச்சந்திரன் இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்தான். தற்கால சுகம் ஒருபெரிதா, இனி என்றும் அழியாப் புகழ் பெரிதா? அரிச்சந்திரன் சத்தியமே உருவெடுத்து வந்தவன் என்று நமது தேச ஜனங்கள் எப்போதும் பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். உயிருக்கு அழியாப் புகழ் உண்மை என்பதை பிள்ளைகளுக்கு விளக்கி உபாத்தியாயர் சொல்லவேண்டும்.

# 10. நளன்.


வட இந்தியாவில் நளன் என்று ஒரு ராஜா இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் தமயந்தி. அவர் அழகிலும் பலத்திலும் சிறந்தவர்; மிகவும் நல்லவர். ஜனங்களுக்கு எப்போதும் உதவி செய்வார். ஆனால் அவருக்குப் பந்தயம் வைப்பதில் மிகவும் ஆசை. நீங்களும் அடிக்கடி பந்தயம் பேசிக்கொள்வது வழக்கம் அல்லவா?

ஒருநாள் அவர் இன்னொருவனுடன் சொக்கட்டான் ஆடினார். "இந்த ஆட்டம் நான் ஜயிப்பேன். இல்லாவிடில் உனக்கு 100 பொன் தருகிறேன்" என்று சொன்னார். ஆனால் அவர் தோற்றுப்போனார். நூறு பொன் கொடுத்தார். மறுபடியும் பந்தயம்வைத்துத்தோற்றார். கடைசியாகத் தம்முடைய ராஜ்யத்தையும் பந்தயம் வைத்துத் தோற்றுப்போனார். ராஜ்யத்தை விட்டு ஓடும்படியாயிற்று.

பிறகு அவர் தம் மனைவியுடன் காட்டில் அலைந்தார். அங்கு அவர்கள் வெகு கஷ்டப்பட்டார்கள். தமயந்தியின் பிதா இன்னொரு ஊரில் ராஜாவாக இருந்தார். அவளை அங்குப் போகும்படி நளராஜர் சொன்னார். ஆனால் தமயந்தி கணவனைவிட்டுவிட்டு தனியேபோக இஷ்டப்படவில்லை. ஒருநாள் இரவு தமயந்தி தூங்குகையில் அவர் ஓடிப்போய் விட்டார். தமயந்தி விழித்துப் பார்த்ததும் கணவனைக் காணவில்லை. தனியே நடந்து சென்றாள். காட்டு மிருகங்களைக் கண்டு பயந்தாள். ஒருபெரிய

பாம்பு கடிக்கவந்தது. அவள் அழுவதைக்கேட்டு ஒரு வேடன் வந்து அந்தப் பாம்பைக் கொன்றான். கடைசியாக, தமயந்தி தன் பிதா இருக்கும் ஊருக்குச் சென்றாள். அங்குத் தன் பிதாவிடம் எல்லா விஷயங்களையும் சொன்னாள். அவர் நளன் இருக்கும் இடத்தை விசாரிக்கும்படி ஆட்களை அனுப்பினார்.

ஒருநாள் தமயந்தி வீட்டிற்கு ஒரு ராஜா வந்தார். அவர் ரதத்தை ஓட்டிக்கொண்டு ஒரு ஆள் வந்தான். தமயந்தி அந்த ஆளைப் பார்த்தாள். தன் கணவன் நளன்போல் இருந்தது. தன் குழந்தையை அவனிடம் அனுப்பினாள். அவன் அக்குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தமிட்டான்; அழுதான். அவன் தான் நளன் என்று நிச்சயமாயிற்று. தமயந்தி அவரை அழைத்து உபசாரம் செய்தாள்.



17809

நளமகாராஜா கடவுளைத் தோத்திரம் செய்தார். பிறகு தம்ராஜ்யத்தை ஜெயித்தார். தம் மனைவியையும் குழந்தையையும் ஊருக்கு அழைத்துச் சென்றார். அவர்களுடன் சந்தோஷமாக வசித்தார். பிறகு அவர் பந்தயம் வைக்கும் வழக்கத்தை விட்டுவிட்டார்.

# 11. திருமங்கையாழ்வார்.

சோழ ராஜாவுக்குள் அடங்கி பல சிற்றரசர்கள் முற்காலத்தில் ஆண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு நீலன் என்று பெயர். அவன் வெகு திறமையுடன் போர்புரிந்து அநேக சத்துருக்களை ஜயித்தான். சோழராஜனும் அவனைப் புகழ்ந்து அவனுக்கு மிகுந்த வெகுமதி அளித்தான். சில வருஷங்களுக்குப் பிறகு நீலனுக்கு விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

குமுதவல்லி என்னும் அழகிய பெண்ணை விரும்பினன். ஆனல் அவள் மிகவும் தெய்வ பக்தியுள்ளவள். நீலனும் அவளைத் திருப்திசெய்யும் பொருட்டு பக்தர்களை மிகவும் உபசரித்தான். சிலநாட்களுக்குப் பிறகு குமுதவல்லியை மணம் செய்து கொண்டான். தன் திரவியத்தை யெல்லாம் பக்தர்களுக்குக் கொடுத்தான். கோவில்களைக் கட்டினன். இராஜ்ய விவகாரங்களை மறந்து எப்போதும் பக்தர்களுக்குப் பணிவிடை செய்து வந்தான். சோழ ராஜாவுக்கு அனுப்பவேண்டிய பணத்தையும் செலவுசெய்து விட்டான். இதை அறிந்த சோழராஜன் பலவீரர்களை அனுப்பி நீலனைப் பிடித்துவந்து சிறைச்சாலையில் அடைத்தான். நீலன் சிறையில் வெகு கஷ்டப்பட்டான். பகவான் அவன் வருந்துவதைக் கண்டு இரக்கமடைந்தார். சுவாமி நீலன் கனவில் தோன்றினர். காஞ்சிபுரத்திற்கு வந்தால் பணம் தருவதாகச் சொன்னர்.

அப்படியே சோழனிடம் அனுமதிபெற்று நீலன் காஞ்சிபுரம் சென்றான். பெருமாள் அருளால் ஏராளமான செல்வத்தை அடைந்தான். ராஜாவுக்குச் சேரவேண்டிய பணத்தை அனுப்பினான். மறுபடியும் முன்போலவே பக்தர்களுக்குப் போஜனம் அளித்தான். இவ்வாறு செய்துவரும் நாளில் நீலன் மிகவும் ஏழையாகிக் கையில் ஒரு காசுமின்றித் தவித்தான். பக்தர்களுக்கு உணவு எவ்விதம் அளிப்பது என்று அழுதான். வழியில் செல்லும் ஜனங்களிடம் இருக்கும் பணத்தை அடித்துப் பிடுங்கிவந்து பக்தர்களுக்கு உபசாரம் செய்தான். ஒருநாள் பகவானே ஒருமனிதன் போல் வேஷம்பூண்டு அவ்வழியே சென்றார். நீலன் அவரையும் அதட்டி அவரிடம் இருந்த பொருளைப் பிடுங்கிக் கொண்டான். அவர் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை. நீலன் அதைப்பல்லால் கடித்து இழுத்தான். சுவாமி உடனே மறைந்துபோக, நீலன் ஆச்சரியப்பட்டு நின்றான். பெருமாளும் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். ஸ்ரீரங்கம் போய் பெருமாளுக்குப்பணிவிடைசெய்யும்படி உபதேசித்தார்.

அவர் அன்றுமுதல் மகாபக்தராக விளங்கினார். அவருக்குத் திருமங்கையாழ்வார் எனப்பெயர் வழங்கியது. ஸ்ரீரங்கம் பெரிய கோவிலைச் சீர்ப்படுத்திக் கட்டினார். அவர் பகவானைத் துதித்துப் பல பாடல்கள்பாடி இருக்கிறார். அப்பாடல்களையும் மற்ற வைஷ்ணவ ஆழ்வார்கள் பாடிய பாடல்களையும் நாலாயிரப் பிரபந்தத்தில் படிக்கலாம்.

# 12. துருவன்.

வானத்தில் பல நட்சத்திரக் கூட்டங்களைப் பார்க்கிறோம். அவைகளுக்கு என்ன பெயர்கள் என்று தெரியுமா? இருபத்தேழு நட்சத்திரக் கூட்டங்கள் காணப்படுகின்றன. இவைகளைத் தவிர வேறு பல நட்சத்திரங்களும் உள. சற்று வடக்காகத் தாழ்ந்து ஒரு சிறு நட்சத்திரம் இருக்கிறது. அதற்குத் துருவன் என்று பெயர். இந்த நட்சத்திரம் மாத்திரம் எப்போதும் ஒரே இடத்தில் நிலையாக இருக்கும். ஆனால் மற்ற நட்சத்திரங்கள் எல்லாம் துருவனைச் சுற்றிச் செல்வதுபோலிருக்கும். ஒரே திடபுத்தியுடன் இருப்பவன் துருவன் போல் இருக்கிறான் என்று நாம் சொல்வோம்.

முற்காலத்தில் துருவன் என்னும் பையன் ஒருவன் இருந்தான். அவன் உத்தானபாதன்



என்ற ராஜாவின் பிள்ளை. அந்த ராஜாவுக்கு இரண்டு மனைவிகள் உண்டு. முதல் மனைவியின் பிள்ளை துருவன். இரண்டாவது மனைவியின் பிள்ளை உத்தமன். ஒரு நாள் ராஜாவின் மடியில் உத்தமன் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அவன் அருகில்

அவன் தாயாரும் நின்றுகொண்டிருந்தாள். அப்போது துருவன் ஓடிவந்து தன் தந்தை மடியில் உட்கார்ந்தான். ஆனால் உத்தமன் தாயார் கோபித்து அவனை விரட்டினாள்.

துருவன் மிகவும் வருத்தப்பட்டான். தன் தாயாரிடம் சொன்னான். அவள் சுவாமியை வேண்டிக்கொள்ளும்படி புத்தி சொன்னாள். உடனே சிறுவனான துருவன் காட்டிற்குச் சென்று சுவாமியைத் தியானம் செய்தான். பல நாட்கள் காட்டிலேயே இருந்து சுவாமியை நினைத்து பக்தி செய்து வந்தான்.

சுவாமியும் அவனது மனோதைரியத்தை மிகவும் புகழ்ந்தார். அவனுக்கு எதிரில் தோன்றினார். துருவன் சந்தோஷமடைந்து சுவாமியைத் தோத்திரம் செய்தான். சுவாமியும் அவனை ஆசீர்வாதம் செய்தார்.

துருவனைக்காணாமல் உத்தானபாதன் தவித்தான். அவன் திரும்பி வந்தவுடன் அவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான். துருவன் மிகவும் நீதியாக அரசுசெய்து வந்தான். அவன் இறந்த பிறகு துருவன் என்ற நட்சத்திரமாக விளங்குகிறான். அவன் பெயரும் பக்தியின் திடமும் நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்.

---

# 13. சாவித்திரி.

முன் ஒருகாலத்தில் வட இந்தியாவில் அசுவபதி என்று ஒரு இராஜா இருந்தார். அவருக்கு சாவித்திரி என்ற அழகிய ஒரு பெண்உண்டு. அவளுக்கு வயது வந்தவுடன் தகுந்த கணவனை மணம் செய்வதற்கு அசுவபதி பல இடங்களில் விசாரித்தார். ஒரு நாள் சாவித்திரி காட்டுவழியே பிரயாணம் செய்யும்போது ஒரு அழகான வாலிபனைக் கண்டாள். அவன் பெயர் சத்தியவான். அவனையே கலியாணம் செய்துகொள்வதாகத் தன் பிதாவிடம் தெரிவித்தாள்.

சத்தியவானுடைய பிதாவின் இராஜ்யத்தைச் சத்துருக்கள் பிடித்துக்கொண்டார்கள். அதனால் அவன் தன் மாதா பிதாக்களுடன் காட்டில் வசித்தான். ஆயினும் சாவித்திரி அவனையே மணம் செய்துகொள்வதாகச் சொன்னாள். அவளிஷ்டப்படியே அசுவபதி காட்டிற்குச் சென்றார். சாவித்திரியைச் சத்தியவானுக்கு மணம்செய்துகொடுத்தார்.

சாவித்திரியும் தன் கணவனுடன் காட்டில் வசித்திருந்தாள். அரண்மனையில் சுகமாக வளர்ந்த சாவித்திரி காட்டில் குடிசையில் காய்கனிகளைத் தின்று தன் கணவனுடன் சந்தோஷமாக இருந்தாள். கிழவர்களான தன் மாமன் மாமிக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வாள். தன் கணவனுடன் காட்டிற்குச்சென்று காய்கனிகள் சேகரித்துக் கொண்டு வருவாள்.

இப்படியிருக்கும் நாளில் சத்தியவானுடைய ஆயுட்காலம் குறுகியது. ஒருநாள் சத்தியவானும்



சாவித்திரியும் காய்கனிகள் சேகரிக்கும் பொருட்டுக்காட்டிற்குள்ளே சென்றார்கள். சத்தியவான் மூர்ச்சையாக விழுந்து விட்டான். அவனுயிரைக்கொண்டு போக எமன் வந்தான். இதையறிந்தசாவித்திரி பகவானைத் தோத்திரம் செய்தாள். உயிரைக் கொண்டுபோகும் எமன் அவள் கண்ணுக்குப் புலப்பட்டான். சாவித்திரியும் அவனை வேண்டிக் கொண்டே அவன் பின்னால் சென்றாள். எமனும் அவளுடைய திடபுத்தியைக்கண்டு மகிழ்ந்தான். நெடுநேரம் எமனைத் தோத்திரம் செய்தாள். வெகு தூரம் அவனைப் பின்தொடர்ந்தாள். எமன் அவளுக்குப் பல வரங்கள் கொடுத்தான். அவள் மாமன் இராஜ்யம் திரும்பவும் கிடைக்கும் என்றான். அவள் மாதா பிதாக்களுக்குப் புத்திரர்கள்உண்டாகும் என்றான். அவளுக்கும் புத்திரர்கள் உண்டாகும் என்று சொன்னான். சாவித்திரியோ இன்னமும் எமனைப் பின்தொடர்ந்தாள். எமன் திரும்பிப் பார்த்து "இன்னமும் என்ன வேண்டும்? உனக்கு வேண்டிய வரங்களை அளித்தேனே!" என்றான். ஆனால் சாவித்திரியோ "என் கணவன் பிழைக்

கும்படி செய்யவேண்டும்" என வேண்டினுள். எமன் அவள் குணத்திற்கு மெச்சினுன். அவள் கணவன் உயிரைக் கொடுத்துவிட்டுச் சென்ருன்.

சாவித்திரி திரும்பிவந்து தன் கணவனைப் பார்த்தாள். சத்தியவான் தூங்கி விழித்தாற்போல எழுந்தான். சாவித்திரி மகிழ்ந்து பகவானைத் துதி செய்தாள். பிறகு இருவரும் குடிசைக்கு வந்தார்கள். சத்தியவான் தகப்பனுரை ராஜ்யத்திற்கு வரும்படி பலர் வந்து வேண்டினர். இந்த ஆச்சரியத்தைக் கண்டு சத்தியவான் மகிழ்ந்தான். பிறகு சாவித்திரியின் அன்பினுல் இவைகள் நடந்தன என்று அறிந்தான். அவளை எல்லாரும் புகழ்ந்தார்கள். சத்தியவான் தன் மாதா பிதாக்களுடனும் தன் அன்புள்ள மனைவியுடனும் ராஜ்யத்திற்குச்சென்று சுகமாக வசித்தான்.

கணவனிடம் சாவித்திரி போல அன்பு மிகுந்து வசிக்கவேண்டும் என்று பெண்கள் எல்லாரும் வேண்டிக் கொள்வார்கள். சாவித்திரியின் பெயர் நமது தேசத்தில் என்றும் புகழுடன் விளங்குகிறது.

## 14. பொற்கைப் பாண்டியன் கதை.

தென் இந்தியாவில் முன் காலத்தில் மூன்று ராஜ்யங்கள் இருந்தன. தஞ்சை ஜில்லாவுக்குச் சோழ தேசம் என்று பெயர். அதற்குத் தெற்கே பாண்டிய தேசம் இருந்தது. மேற்குக் கரையில் சேர தேசம் இருந்தது.

பாண்டிய தேசத்தின் முக்ய பட்டணம் மதுரை. மதுரையில் அரசாட்சி செய்த ராஜாக்க

ளைப்பற்றி பல கதைகள் உண்டு. இப்பாடத்தில் ஒரு கதை படிப்போம்.

மதுரை ராஜாக்களில் ஒருவருக்குப் பொற்கைப் பாண்டியர் எனப்பெயர். ஒவ்வொரு வீட்டிலும் ஜனங்கள் சந்தோஷமாக இருக்கும்படி அவர் பாடுபடுவார். தினந்தோறும் ஊரெல்லாம் சுற்றுவார். இரவில் ஒருவருக்கும் தெரியாமல் விசாரிப்பார். ஒருநாள் அவர் ஒரு தெரு வழியே சென்றார். அங்கு ஒரு வீட்டில் ராஜாவைப்பற்றிய பேச்சு காதில் விழுந்தது.

அந்த வீட்டு பிராமணன் காசிக்குப் போவதாகச் சொன்னான். அவன் மனைவி தனியாக இருக்க வேண்டுமே என்று பயந்தாள். "நமது ராஜா இருக்கும்போது ஒரு பயமும் இல்லை." என்று அந்த பிராமணன் சொன்னான். இந்தப் பேச்சு ராஜாவின் காதில் விழுந்தது. மறுநாள் அந்த பிராமணன் காசிக்குச்சென்றான். ராஜா தினந்தோறும் அவன் வீட்டிற்குச்சென்று காவல் காப்பார். ஆனால், அந்த பிராமணன் மனைவிக்கு இது தெரியாது. அவள் யாதொரு பயமும் இல்லாமல் இருந்தாள். ஒரு நாள் அவ்வீட்டிற்கு ஒரு திருடன் வந்தான். வாயலில் காவல் செய்துகொண்டிருந்த ராஜா அவனைப் பார்த்தார். அவனுடன் சண்டை செய்தார். ராஜா கையில் அத்திருடன் கத்தியினால் குத்தினான். ஆயினும் ராஜா அவனை அடித்துக் கீழே தள்ளினார். பிறகு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார்.

மறுநாள் காலையில் திருடன் வந்த விஷயம் ஊரெல்லாம் தெரிந்தது. ராஜாவே அவ்விதம்

திருடனுடன் சண்டைசெய்தார் என்று ஜனங்கள் அறிந்தார்கள். ராஜாவின் குணத்தை எல்லாரும் புகழ்ந்தார்கள். *

காசியிலிருந்து பிராமணன் திரும்பி வந்தான். ராஜா செய்த உதவியை அறிந்தான். மற்ற ஜனங்களைக் கூப்பிட்டான். அவர்களுடன் சென்று அரசனை வாழ்த்தினான். பலத்தகாயம் பட்டதால் அரசன் கையை இழந்தான். ஜனங்கள் பொன்னுலாகிய கை ஒன்று செய்து அரசனுக்கு அளித்தார்கள். பிறருக்கு உதவி செய்யாத கை வீணான கை; ஆனால் அரசன் கையோ தங்கக் கை என்று எல்லாரும் சொல்லி மகிழ்ந்தார்கள். அது முதல் அரசனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்று பெயர் ஏற்பட்டது.

---

* உபாத்தியாயருக்கு—இக்கதையை வேறு விதமாகச் சொல்லுவதுண்டு. ஆனால் பிள்ளைகளுக்கு விகல்பமான எண்ணங்களை நாமே தெரிவிக்காமலிருக்க உத்தேசித்து இவ்விதம் மாற்றி எழுதப்பட்டது. பிராமணன் திரும்பி வந்ததை அறியாத அரசன், யாரோ வந்திருப்பதாக எண்ணி அவசரப்பட்டுக் கதவை இடித்தான். ஆனால் பிராமணனே வந்துவிட்டதை அறிந்தான். அவன் விபரீதமாக ஏதேனும் தப்பு எண்ணம் கொள்ளுவானேஎன்று பயந்தான். பிறகு ஒவ்வொருவீட்டிலும் கதவை இடித்தான். அவசரப்பட்டுச் செய்த காரியத்திற்காகத் தன் கையை வெட்டிக்கொண்டான். ஜனங்கள் இதையறிந்து ராஜாவின் குணத்தை மெச்சி, ஒரு பொன் கை செய்து பூட்டினார்கள். இது வழக்கமாகச் சொல்லும் கதை.


# 15. இயேசுநாதர்.

நமது தேசத்தில் மூன்று மதங்கள் உள. அவையாவன. ஹிந்து மதம், முகம்மதியமதம், கிறிஸ்தவ மதம். முகம்மது நபீயவர்கள் முகம்மதிய மதத்தை ஏற்படுத்தினர். கிறிஸ்தவ மதம் இயேசுநாதரால் ஏற்பட்டது.

இயேசு கிறிஸ்து அரேபியாவில் பெத்லஹாம் என்ற ஊரில் பிறந்தார். அந்த தேசத்து ஜனங்களுக்கு யூதர்கள் எனப்பெயர். அவர்கள் நெடுநாளாக ஒரு மகான் அவதரிக்கப் போவதாக எதிர்பார்த்திருந்தார்கள். கிறிஸ்து பிறந்தபோது வானத்தில் ஒரு அழகிய நட்சத்திரம் காணப்பட்டது. யூதர்கள் அரசனுகிய ஹெராட் என்பவன் அக்குழந்தையைக் கொன்று விடும்படி ஆட்களை அனுப்பினன். இதையறிந்த கிறிஸ்துவின் பெற்றோர்கள் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு வேறு தேசத்திற்கு ஓடிப்போனர்கள்.

சில வருஷங்களுக்குப் பிறகு கிறிஸ்து தம் ஊருக்குத் திரும்பிவந்தார். யூதர்களின் முக்கிய பட்டணமாகிய எருசெலேம் சென்ருர். அங்கு ஜனங்களுக்கு உபதேசம் செய்தார். பல வியாதியஸ்தர்களை சொஸ்தம் செய்தார். இறந்துபோன ஒருவரை எழுந்துவரச் செய்தார். ஒரு சமயம் புயல் காற்று அடிக்கும் போது பெரிய ஏரியில் நடந்து சென்ருர். இவர் தெய்வத்தன்மை பொருந்திய மகான் எனப் பலர் இவர் உபதேசத்தை ஏற்றுக்கொண்டார்கள். பிறகு எருசெலேம் கோவிலில் வியாபாரம் செய்துகொண்டிருந்தவர்களை

விரட்டினுர். கோவிலில் தின்பண்டங்களும் வஸ்தி ரங்களும் இன்னும் பல சாமான்களும் விற்பார்கள். "இது தெய்வாலயம், கடைத்தெரு இல்லை" என்று வியாபாரிகளைத் துரத்திவிட்டார். இவர் செய்த உப தேசங்களினுல் வெகுநாளாக இருந்த புரோகிதர் களுக்கும் ஆசாரியர்களுக்கும் கோபம் உண்டாயி ற்று. தெய்வத்தன்மையுள்ள மகான் என்று சொல் லிக்கொள்வதாக இயேசுவைக் குற்றம் சாட்டினுர் கள். புரோகிதர்களின் தூண்டுதலினுல் ஜனங்கள் எல்லாரும் இயேசுவைக் கொன்றுவிடவேண்டு மென்ருர்கள். அவ்விதமே, அவர் சிலுவையில் அறையப் பட்டார். மரச்சட்டத்தில் இரு கைகளையும்விரித்து ஆணிகள் அடிப்பது வழக்கம். சிலுவை யில் இயேசு கிறிஸ்து வெகு அவஸ்தைப் பட்டார். அறி யாமற் செய்த இந்தக் கொடு மைக்காக அவர் அந்த ஜனங்களைக் கோபிக்கவில்லை. அவர் இறந்தபோது கெட்ட சகுனங்கள் உண்டாயின. பூமி அதிர்ச்சியடைந்தது ; இருள் சூழ்ந்தது.



கிறிஸ்துவின் முக்கிய சீஷர்கள் பன்னிரு பேர்கள். இறந்த சில நாட்களுக்குப் பிறகு கிறிஸ்து மறுபடியும் உயிர் பெற்று எழுந்தார். சீஷர்கள் கண்டு சந்தோஷம் அடைந்தார்கள். பூலோக முழுவதும் சென்று கிறிஸ்தவ மதத்தைப்

போதிக்கும்படி இயேசு நாதர் சொல்லிவிட்டு மறைந்தார். அவ்விதமே அவர் சீஷர்கள் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்தனர். அனேக ஜனங்கள் கிறிஸ்தவர்களாயினர். இப்போது ஐரோப்பா ஜனங்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள். அவர்கள், கிறிஸ்தவ மதம் எல்லாத் தேசங்களிலும் பரவுவதற்கு வெகுவாக பாடு படுகின்றனர். கிறிஸ்தவப் பாதிரிகள் காடுகள் மலைகள் மிகுந்த தேசந்தோறும் சென்று ஜனங்களுக்குப் போதிக்கிருர்கள்.

கிறிஸ்து பிறந்த வருஷம் முதல் ஐரோப்பியர்கள் வருஷக்கணக்கு செய்கிருர்கள். இப்போது கிறிஸ்து பிறந்து 1926 வருஷங்களாகின்றன. கிறிஸ்துவின் சரித்திரமும் அவர் போதித்த விஷயங்களும் 'பைபிள்' என்ற புத்தகத்தில் காணப்படும்.

## 16. ஞானசம்பந்தர்.

பல வருஷங்களுக்கு முன் சீர்காழி என்னும் ஊரில் ஒரு பிராமணர் வசித்திருந்தார். அவர் தினம்கோவிலுக்குப்போய் சுவாமியைத் தரிசித்து வருவார். சுவாமியின் அருளினுல் அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அருமையாக வளர்த்துவந்தார். ஒரு நாள் அவர் ஸ்நானம் செய்வதற்காகச் சென்ருர். அப்பிள்ளையும் அவருடன் ஓடிவந்தது. பிள்ளையைக் குளக்கரையில் உட்காரவைத்துவிட்டு அவர் ஸ்நானம் செய்தார். பிள்ளை பசியினுல் அழுதது. அப்போது

பார்வதியும் பரமசிவனும் வந்து அப்பிள்ளை யைத் தேற்றினார்கள். பார்வதி அப்பிள்ளைக்குப் பால் கொடுத்தனர். பிறகு, பிள்ளை சந்தோஷமாக இருந்தது. ஸ்நானம் செய்து வந்த பிதா குழந்தையைப் பார்த்து, "உனக்குப் பால் கொடுத் தவர் யார்?" என்று கேட்டார். அப்பிள்ளையும் "தோடுடைய செவியன்" என ஆரம்பித்து ஸ்வா மியைத் தோத்திரம் செய்து பாடியது.

அப்பிள்ளை ஞானப்பால் குடித்ததால் ஞான சம்பந்தர் எனப் பெயர் ஏற்பட்டது. சிறு வயது முதல் சம்பந்தர் ஸ்வாமியைப் பற்றிப் பல பாடல்கள் பாடிவந்தார். பிறகு தந்தையாரிடம் அனுமதி பெற்றுப் பல ஸ்தலங்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார். ஒவ்வொரு ஊரிலும் சுவாமியின் அருளால் பலருக்கு உதவி செய்தார். ஒரு ஊரில் ஜனங்கள் குளிர்காய்ச்சலினால் அவதிப் பட்டார்கள். சம்பந்தர் சுவாமியை வேண்டிப் பாடினார். உடனே வியாதி நீங்கி ஜனங்கள் சுகமடைந்தார்கள். இன்னொரு ஊரில் பாம்பு கடித்து இறந்துபோன தன் கணவனுக் காக, ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். அவள் வருத்தத்தை நீக்கும் பொருட்டு சம்பந்தர் பாடல்கள் பாடி சுவாமியைத் துதித்தார். இறந்து போன கணவனும் எழுந்திருந்தான்.

இவ்விதமாகப் பல ஊர்கள் சென்று, கடை சியில் மதுரைக்குச் சென்றார். அந்த ஊர் ராஜா வாகிய பாண்டியனது வயிற்று வலியைப் போக் கடித்தார். வீபூதியைத் தடவி அரசனுக்கு ஆசிர் வாதம் செய்தார். பிறகு, திரும்பவும் சீர்காழி வந்து

சேர்ந்தார். நல்லூரில் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு, தம் மனைவியுடன் சுவாமியைத் துதிசெய்து வசித்துவந்தார். சிவபெருமான் இருவரையும் கைலாசத்திற்கு அழைத்துக் கொண்டனர்.


சம்பந்தர் சிவபக்தர்களில் முக்கியமான ஒருவர். அவர் பாடிய பாடல்களை நாம் இப்போது பாடி ஆனந்தமடைகிறோம்.

## 17. மனுச்சோழர்.

தஞ்சாவூர் ஜில்லாவை முன்னாட்களில் சோழ ராஜாக்கள் ஆண்டுவந்தார்கள். அவர்கள் நீதி தவறாதவர்கள். ஜனங்களுக்கு நன்மையே செய்து வந்தார்கள். ராஜாக்கள் எவ்விதம் அரசாட்சி செய்ய வேண்டுமென்று மனு என்ற ஒரு பெரியவர் சிலநீதிகள் எழுதிவைத்திருக்கிறார். அவ்விதம், தர்மமாக அரசு செய்பவர்களை மனு நீதி தவறாமல் அரசு செய்பவர்கள் என்று நாம் சொல்லுவோம்.

திருஆரூர் சோழராஜ்யத்தின் முக்கியபட்டணமாயிருந்தது. அந்த ஊரில் ஒருராஜா இருந்தார். மனுநீதிதவறாமல் அரசாட்சி செய்ததால் அந்த சோழராஜவுக்கு மனுச்சோழர் எனப்பெயர் ஏற்பட்டது. அவர் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்வசித்திருந்தார். அவர் காலத்தில் ஜனங்கள் சந்தோஷமாக இருந்தார்கள். பலமுள்ளவர்களைக் கண்டு மெலியோர் பயப்படவேண்டியதில்லை. மிருகங்கள்கூடப் பயமின்றி இருந்தன.

பசுவும் புலியும் ஒரே துறையில் சுகமாகத் தண்ணீர் குடிக்கும். அதாவது, மனுச் சோழர் அவ்வளவு நியாயமாக அரசாட்சி செய்தார் என்று பொருள்.



அரசர், அரண்மனை வாயிலில் ஒரு மணிகட்டி யிருந்தார். தனக்குள்ள குறையைச் சொல்லும் பொருட்டு யார் வந்தாலும் அம்மணியை அடிக்கலாம். உடனே அரசர் வந்து விசாரித்து அவருக்கு உதவி செய்வார். இப்படியிருக்க, ஒரு நாள் ஒரு பசுமாடு வந்து தன் வாயால் மணியில் கட்டியிருந்தகயிற்றை இழுத்து அந்த மணியை அடித்தது. அரசரும் ஓடிவந்தார். பசுமாடு கதறிக் கொண்டுநிற்பதைப் பார்த்தார். உடனே சேவகர்களை அனுப்பி விசாரிக்கச் சொன்னார்.

இந்தச் சமயத்தில், அரசருடைய பிள்ளையாகிய வீதிவிடங்கன் வந்தான். அவன் தன் பிதாவிடம் நடந்த விஷயத்தைச் சொன்னான். அவன் ரதத்தில் வீதி வழியே போகும் போது, சக்கரத்தின் கீழ் ஒரு பசுவின் கன்று அகப்பட்டு இறந்து போயிற்று. அந்தப் பசுவும் அரசனிடம் வந்து மணியை அடித்தது; தன் குறையைத் தெரிவித்தது. "தந்தையே! நான் செய்த குற்றத்திற்கு என்னைத் தகுந்தபடி தண்டனை செய்யும்படி வேண்டுகிறேன்" என்று வீதிவிடங்கன் சொன்

னான். அரசரும் "அப்படியே செய்வேன்" என்று விடை அளித்தார். கூடியிருந்த பிரபுக்களும் ஜனங்களும் ஆச்சரியப் பட்டார்கள். என்ன நடக்குமோ என, அவர்கள் திகைத்து நின்றார்கள்.

தமது ரதத்தைக் கொண்டு வரும்படி அரசர் கட்டளையிட்டார். ரதம் வந்தவுடன் அதில்தாம் ஏறிக் கொண்டு, வீதி விடங்கனைச் சக்கரத்தின்கீழ் படுத்துக்கொள்ளும்படி சொன்னார். அவனும் அப்படியே செய்ய, அரசர் ரதத்தை ஓட்டினார். "ஆகா! இப்படியும் செய்வாருண்டோ" என எல்லாரும் பேசிக் கொண்டனர். அரசரது மேன்மைக் குணத்தைக் கண்ட கடவுள் உடனே அங்கு தோன்றினார். அவர் அருளினால் கன்றுக் குட்டியும் அரசகுமாரனும் உயிர் பெற்று எழுந்தனர். மனுச்சோழரது நீதியின் பெருமையைக் கடவுள் மெச்சினார்.



திரு ஆரூரில் இக்கதையை விளக்கும் கல் சிலைகளையும், கல்தேரையும் பார்க்கலாம்.

# 18. சரபோஜி ராஜா.

தஞ்சாவூரில் அழகிய அரண்மனை ஒன்று இருக்கிறது. அதில் ஒரு பாகத்தில் பல புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குச் "சரபோஜிராஜா புத்தகசாலை" என்று பெயர்.



சரபோஜி சுமார் நூறு வருஷங்களுக்கு முன் அரசாட்சி செய்தார். அவர் தாம் தஞ்சையில் ஆண்ட கடைசி அரசர். அவர் சிறுவயதில் ஆங்கில பாஷை படித்தார். ஷ்வார்ட்ஸ் என்ற ஒரு ஆங்கிலப் பாதிரியார் சரபோஜியை வளர்த்து வந்தார். அப்போது ராஜாவாயிருந்தவர் சரபோஜியின் சிற்றப்பன். அவன் சரபோஜியைவிஷம் கொடுத்துக்கொல்ல முயற்சி செய்தான். சரபோஜி அரண்மனையைவிட்டுஓடிப்போனார். ஷ்வார்ட்ஸ் பாதிரியாரிடம்வந்து சேர்ந்தார். அவரும் சரபோஜியைக் கூட்டிக் கொண்டு சென்னைப் பட்டணம் சென்றார். அங்கு சரபோஜி சிலகாலம் வசித்தார்.

ஷ்வாட்ஸ்துரையின் உதவியால் சரபோஜி தஞ்சை ராஜாவானார். அந்தத் துரைக்கு வேண்



டியபணம் கொடுத்தார். ஏழைப்பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். அவருக்காக ஒரு அழகிய கிறிஸ்தவக் கோவில் கட்டினார். தஞ்சாவூரில் அக்கோவிலை இப்போதும் பார்க்கலாம். அவர் இறந்தபோது சரபோஜி மிகவும் வருத்தம் அடைந்தார். சரபோஜி அந்தத் துரை சமீபம் நிற்பது இப்படத்தில் காட்டியிருக்கிறது.

சரபோஜி வெகுபாடுபட்டுப் புத்தகங்களைச் சேகரித்தார். பல பண்டிதர்களுக்கு ஏராளமான பொருள் அளித்தார். பல ஊர்களிலிருந்து ஓலைச் சுவடிகளைச் சேகரித்தார். ஆங்கிலேயரிடம் அதிகப் பணம் கொடுத்துப் பல ஆங்கிலப் புத்தகங்களைச் சம்பாதித்தார். ஒரு சமயம், புத்தகம் வாங்குவதற்குக் கையில் பணம் இல்லை. தம் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கொடுத்தார். அவ்வளவு ஆசையுடன் ஏற்படுத்திய புத்தகசாலை, சரபோஜியின் ஞாபகம் நமக்கு எப்போதும் இருக்கும்படி செய்கிறது.

சரபோஜி இறந்தபிறகு தஞ்சாவூர் முழுவதையும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்கின்றனர்.



# 19. சகுந்தலை.

முனிவர்கள் காட்டில் குடிசைகள் கட்டிக் கொண்டு வசிப்பார்கள். கண்ணுவர் என்ற ஒரு முனிவர் ஒரு நாள் ஓர் மரத்தடியில் ஒரு அழகிய பெண்குழந்தை தனியே கிடந்ததைப் பார்த்தார். சகுந்தலைப்பட்சிகள் அக்குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தன. கண்ணுவர் அக் குழந்தையை எடுத்து வளர்த்தார். அதற்குச் சகுந்தலை என்று பெயர் இட்டார்.

சில வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் அக் காட்டில் துஷ்யந்தன் என்னும் ராஜா வேட்டையாடி வந்தான். அப்போது புஷ்பங்கள் பறித்துக் கொண்டிருந்த சகுந்தலையைப் பார்த்தான். அழகுள்ள அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினான். சகுந்தலையும் இஷ்டப்பட்டாள். இருவரும் விவாகம் செய்துகொண்டார்கள். தன் மோதிரத்தை ஞாபகமாக வைத்துக் கொள்ளும்படி சகுந்தலையிடம் கொடுத்தான். அவளை அழைத்து வருவதற்குப் பல்லக்கும் ஆட்களும்



அனுப்புவதாகச் சொன்னான். பிறகு துஷ்யந்தன் தன் ஊருக்குத் திரும்பினான்.

வெகுநாட்களாயின. துஷ்யந்தன் அனுப்புவதாகச் சொன்ன ஆட்கள் இன்னும் வரவில்லை. சகுந்தலை தன் கணவனை நினைத்துக்கொண்டே இருந்தாள். ஒருநாள் தூர்வாசர் என்ற ஒரு முனிவர் வந்தார். அவர் மிகவும் பசியாயிருந்தார். ஆனால், சகுந்தலை அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அம்முனிவர் கோபித்து "உன் கணவன் உன்னை மறந்து போவான்" என்று சொல்லிவிட்டுப்போனார்.

கண்ணுவரிஷி, சகுந்தலையைத் துஷ்யந்தனிடம் அனுப்பினார். துஷ்யந்தன் சபையில் சிம்ஹாசனத்தில் வீற்றிருந்தான். சகுந்தலையைப் பார்த்தான். ஆனால் அவனுக்கு அவளைப்பற்றி ஒன்றும் ஞாபகம் வரவில்லை. "நீ யார்? இங்கு நில்லாதே போகலாம்" என்று சொன்னான். சகுந்தலை மிகவும் வருத்தமடைந்தாள்.

"தாங்கள் என்னைக் காட்டில் விவாகம் செய்துகொண்டீர்கள். அதற்கு அடையாளமாகக் கொடுத்த மோதிரம் இதோ பாருங்கள்!" என்று கைவிரலைக்காட்டினாள். விரலில் மோதிரம் காணப்படவில்லை. உடனே சகுந்தலை திடுக்கிட்டு ஐயோ! மோதிரத்தை எங்கேயோ தவறவிட்டேனே! என்று மனங்கலங்கி அழுதாள். பிறகு அரண்மனையை விட்டுச் சென்றாள்.

சிலகாலம் சென்றது. ஒரு நாள் ஒரு செம்படவன் பிடித்த ஒரு மீன் வயிற்றில் அழகிய மோதிரம் ஒன்று இருந்தது. அதை அவன் ராஜா

விடம் கொண்டுபோய்க் கொடுத்தான். துஷ்யந்த னுக்கு அதைப் பார்த்தவுடன் பழய ஞாபகம் வந்தது. சகுந்தலையைத் தேடினான். கடைசியாகத் தேவலோகத்தில் அவளைச் சந்தித்தான். பிறகு இருவரும் சந்தோஷமாக வசித்தார்கள்.

## 20. தேசிங்குராஜன்.

செஞ்சி என்ற மலைக்கோட்டையில் முன்னாட்களில் தேசிங்குராஜன் என்று ஒரு ராஜா இருந்தான். அவன் சுமார் 300 வருஷங்களுக்கு முன் இருந்தவன். அக்காலத்தில் அவனால் கட்டப்பட்ட கோட்டைகளும், மண்டபங்களும், கோவில்களும் இப்போதும் வெகு அழகாக இருக்கின்றன.

தேசிங்குராஜன் சிறுவயது முதற்கொண்டு மிகுந்த தீரச் செயல்கள் செய்து, பெரும்புகழ் பெற்றான். மல்யுத்தம் செய்வதிலும், வாள் வீசுவதிலும், குதிரை ஏற்றத்திலும் தேசிங்கு வெகு சமர்த்தன். ஒரு சமயம், டில்லி சுல்தானிடமிருந்த முரட்டுக்குதிரை ஒன்றை அடக்கினான். சுல்தான் மகிழ்ந்து அக்குதிரையைத் தேசிங்குக்குக் கொடுத்தான். மேலும், சுயேச்சை அரசனாக இருக்கும்படி தேசிங்குக்கு உத்தரவு கொடுத்தான். தேசிங்கு ராஜனும் அவ்வாறே ராஜ்யம் நடத்தி வந்தான்.

ஆனால், அக்காலத்தில் ஆர்காட் நவாப் மற்ற சிற்றரசர்களை ஜயித்துக் கப்பம் கட்டும்படி செய்தார். தேசிங்கோ தான் கப்பம் கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டான். நவாப் அனுப்பிய

தோன்றமல்லன் என்னும் தூதனே, தேசிங்க னது கோபத்தையும், தைரியத்தையும் பார்த்தான்; பயந்துத் திரும்பிப் போய்விட்டான். இச் செய்தி யைக் கேட்ட நவாப் பலமான சைனியத்தை அனுப்பினர்.

"ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்று தேசிங்குராஜன் தைரியமாக யுத்தத்திற்கு வந்தான். அவனுடன் அவன் நண்பன் மாபூத்கார னும் உதவியாக வந்தான். நவாப் சேனே மிகவும் பெரியது. ஆயினும், தேசிங்கு தன் சிறு படையைக் கொண்டு சண்டைசெய்தான். எதிரிகளை வெகு வாய் நாசமாக்கினுன். அவன் நண்பன் மாபூத் காரன் யுத்தத்தில் மடிந்தான். இன்னும் பல வீரர்களும் இறந்தனர். இனி தான் மாத்திரம் யுத்தம் செய்தென்ன, என தேசிங்குராஜன் தன் வாளை நாட்டி அதில் வீழ்ந்து இறந்து போனுன்.

கோட்டையில் இருந்த அவன் மனைவி தேசிங்குராஜனுடைய உடலைத் தேடி எடுத்துவரச் சொன்னுள். அவள் மஞ்சள் ஆடை உடுத்திக் கொண்டாள். ஓரிடத்தில் அக்னிக்குழி உண் டாக்கினுள். அதில் கணவன் உடலைக் கட்டிக் கொண்டே அவளும் விழுந்து இறந்துபோயினள்.

தேசிங்குராஜன் பிரதாபத்தைப் பற்றிப் பல பாடல்கள் உண்டு. நமது ஜனங்கள் அப்பாட்டு களைப் பாடி சந்தோஷப்படுவது வழக்கம்.

# தேசிங்குராஜன் பாடல்.

பல்லைப் படபட வென்று கடித்தானையா ராஜா தேசிங்கு,
கையைத் தூக்கிக் கனைத்துத் தட்டினன் ராஜாதேசிங்கு,
இனியில்லாத கோபமாச்சுது ராஜாவுக் கானுலும்,
கோபத்தினல் கட்டியவனைக் கொல்ல வெழுந்தானும்,
பார்த்தவுடனே தோன்றமல்லனும் பதைத்து விழுந்தானும் ;
விழுந்தவுடனே சலாஞ்செய்து வேண்டிக் கொண்டானும்.
தலையை யசைத்துத் தோளை நெறித்தான் தாவு சிங்கம்போலே.
கண்களை யுருட்டிக் கதும்பினனையா காளசிங்கம் போலே.
"அடா ! என்ன பேச்சுப் பேசினயடா : தோன்ற மல்லண்ணு !
நீ வந்தாற் போல் நவாப்பு வந்தால் நிமிஷமிருக்க மாட்டான்.
பணமென்றசேதி காதில் கேட்டால் பாய்ந்து வெட்டிடுவேன்.
நாளைக்கு வரும் நவாப்பு சாயபை இன்றைக்கு வரச் சொல்லு ;
ரோஷக்காரனுனல் நவாப்பு சாயபை நொடியில் வரச் சொல்லு;
ஆண் பிள்ளையானல் நவாப்பு சாயபை அருகில் வரச்சொல்லு;
மீசையுள்ளவனனல் நவாப்பு சாயபை விரைவில் வரச்சொல்லு;
தைரியமுள்ளவனனல் நவாப் சாயபை சல்தியில் வரச்சொல்லு;
கத்தி முனையிலே பணமுந்தாரேன் நவாப்புக் கானுலும்,
பரசு முனையிலே பணமுந் தாரேன் நவாப்புக் கானுலும்.
போன வருஷத்துக் கிந்த வருஷம் வரகு விளைந்தது.
வரகு வைக்கல் மெத்தக் கிடக்குது ; வாரிப்போகச் சொல்லு.
கோட்டைக்கு வெளியில் மணல் கிடக்குது ; கொண்டு போகச் சொல்லு.]



# 21. என்னுடையது.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். பிள்ளைகள் எல்லாரும் சந்தோஷமாகக் கேட்டனர். ஆனால் நடேசன் மாத்திரம் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு இருந்தான். அவன் முகத்தில் சிரிப்பு இல்லை. உதடுகளைப் பிதுக்கிக் கொண்டு முகத்தை விகாரமாகச் செய்து கொண்டான். மற்றப் பிள்ளைகள் எல்லாரும் அடிக்கடி அவனையே பார்த்தார்கள். அவர்கள் கவனமாகக் கதை கேட்கவில்லை. உபாத்தியாயர் நடேசனைப் பார்த்தார்.

"என் முகத்தை நான் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுவேன்" என்று நடேசன் சொன்னான். ஆனால் உபாத்தியாயர் அவன் சொன்னதை ஒப்புக் கொள்ளவில்லை. "உன்னுடைய முகத்தை விகாரமாகச் செய்து கொள்வதால் எங்களுக்கு வருத்தம் உண்டாகிறது. மற்றவர்களுடைய சந்தோஷம் வீணாகப் போகிறது" என்று அவர் சொன்னார். பிறகு நடேசனை அருகில் அழைத்தார். அவனை அன்பாக விசாரித்தார். நடேசன் வீட்டில் நடந்ததைச் சொன்னான். அவன் வீட்டில் ஒரு அழகிய பொம்மை இருந்தது. அதை நடேசன் எடுத்து விளையாடுவான். அன்று

அவன் தம்பி அந்த பொம்மை வேண்டுமென்று அழுதான். நடேசன் கோபமாக அந்த பொம்மையைவீசிஎறிந்தான்.அது உடைந்துபோயிற்று. "என்னுடைய பொம்மை. நான் உடைத்தேன்" என்று நடேசன் சொன்னான். ஆனால் அவன் மாதா நடேசனைக் கோபித்தாள். "பொம்மை உன்னுடையது மாத்திரம் இல்லை. எல்லாருடையதும் ?" என்றாள்.

"ஆம் அது நிஜம் ?" என்று உபாத்தியாயர் சொன்னார். மற்றப் பிள்ளைகளும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். "நடேசா ! உன்னுடைய முகம் உன்னுடையது அல்ல. அதை உன் இஷ்டப்படி விகாரம் செய்துகொள்ளக் கூடாது. உன்னைப் பார்க்கும் மற்றவர்கள் எல்லாரும் சந்தோஷப் படும்படி உன் முகம் இருக்கவேண்டும். அப்படியிருக்க, அந்த பொம்மை உன்னுடையது என்பது எவ்விதம் ? உன் தம்பியும் அதை வைத்துக் கொண்டு விளையாடவேண்டும் !" என்றார்.

பிள்ளைகளே ! உங்களில் ஒருவன் சிடு சிடு என்று முகத்தை வைத்துக்கொண்டு இருந்தால் உங்களுக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் எல்லாருடன் சிரித்து விளையாடுபவனைப் பிள்ளைகள் மிகவும் விரும்புகிறார்கள். நாம் ஒவ்வொருவரும் பிறருக்குச் சந்தோஷம் ஏற்படும்படியாக நடந்து கொள்ளவேண்டும். அப்படி நடந்துகொள்பவனை எல்லாரும் புகழ்வார்கள்.

# 22. தியாக ஐயர்.

178027.

தஞ்சாவூர் ஜில்லாவில் திருவையாறு என்பது ஒரு முக்கிய பட்டணம். அந்த ஊரில் வருஷா வருஷம் தியாக ஐயர் உற்சவம் நடக்கும். அப் போது பல சங்கீத வித்வான்களும் பாகவதர்களும் வருவார்கள். தியாக ஐயரது ஞாபகார்த்தமாக இவ்வுற்சவம் நடக்கும்.

தியாக ஐயர் மகா சங்கீத நிபுணர். அவர் அநேக வருஷங்களுக்கு முன் ஜீவித்திருந்தார். ஸ்ரீராமரிடம் அவர் அதிக அன்புள்ளவர். எப் போதும் பகவானைத் தோத்திரம் செய்து பாடிக் கொண்டு இருப்பார். அவர் பாடிய பாட்டுகளை எல்லாம் இப்போதும் ஜனங்கள் பாடி ஆனந் தம் அடைகிறார்கள். அப்பாடல்கள் எல்லாம் தெலுங்கு பாஷையில் உள.

தியாக ஐயர் தினந்தோறும் பூஜை செய்வது வழக்கம். அதன் பிறகு தான் அவர் போஜனம் செய்வார். ஒரு நாள் அவர் பூஜை செய்யும் விக்கி ரகம் காணாமற் போய் விட்டது. அதற்காக அவர் வருந்தி அன்ன ஆகார மின்றித் தவித்தார். பக வானை வேண்டிப் பல பாட்டுகள் பாடினார். பிறகு ஆற்றுமணலில் அவ் விக்கிரகம் அகப்பட்டது. அதைக்கண்டு ஆனந்தம் அடைந்தார். அவர் ஒரு



சமயம் திருப்பதி யாத்திரை சென்றார். வழியில் திருடர்கள் அவரைப்பயமுறுத்தினார்கள். ஆனால் ஸ்ரீராமரே ஒரு போர் வீரன் போல வந்து திருடர்களை விரட்டினார்.

இவ்விதமாக, தியாக ஐயர் பக்தி செய்து கொண்டு பாடல்கள் பாடி மகிழ்ந்து இருந்தார். அவர் இறந்துபோய் அநேக வருஷங்களாயினும் அவர் பாடல்கள் யாவராலும் புகழப்படுகின்றன. அவரது பாடல்களை நாமும் பாடி மகிழ்வோம்.

---

## 23. செய்யுட்பாடம்.

---

### 1. கோவிந்த சதகம்.

1. செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீங்கு செய்வாரைத் துரந்தர சாளஇந்தப்
படிக்கொரு மன்னனுண்டானால் உழுது பயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண்டோ அச்சுதாநந்த கோவிந்தனே!

2. காட்டாண்மைவேந்தர் பெருமை யெண்ணுதவன் கண்ணரடி
பட்டாலல்லாமல் வணங்கார்; விடமுள் படாமற் சும்மா
தொட்டாலதுபிள்ளைப்பூச்சியென்பார்; முள்சுறுக்கெனவே
கொட்டாமற் றேளென்பரோ அச்சுதாநந்த கோவிந்தனே!

3. எடுத்தாலு மூறும்; இறைத்தாலு மூறு மிடைநடுவே
மடுத்தால் மறிபடுமோ மணற்கேணித்தண்ணீர் அதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கச்செல்வமுண்டானவர் அன்புடனே
கொடுத்தாற் குறைவருமோ அச்சுதாநந்த கோவிந்தனே!

## 2. குமரேச சதகம்.

1. தவமது செய்தேபெற் றெடுத்தவன் முதற்பிதா,
 தனைவளர்த்தவ னொருபிதா
தயையாக வித்தையைச் சாற்றினோ னொருபிதா,
 சார்ந்த ஸத்குரு வொரு பிதா,
அவமறுத் தாள்கின்ற அரசொருபிதா, நல்ல
 ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்ற துயர் தீர்த்துளோ னொருபிதா,
 அன்புள முனோன் ஒரு பிதா,
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா,
 கலி தவிர்த்தவ னொரு பிதா,
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
 கருதுவது நீதியாகும்,
மவுலிதனில் மதியரவு புனைவிமலர் உதவுசிறு
 மதலையெனவரு குருபரா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
 மலைமேவு குமரேசனே!

2. கடுகடுத்தாயிரம் செய்குவதில் இன்சொலால்
 களிகொண் டழைத்தல் நன்று
கனவேள்வியாயிரஞ் செய்வதிற்பொய்யுரை
 கருத்தொடு சொலாமை நன்று;
வெடுவெடுக்கின்றதோ ரவிவேகியுறவினில்
 விவேகியொடு பகைமை நன்று;
வெகுமதிகளாயிரஞ் செய்வதில்அரைக்காசு
 வேளைகண் டுதவல் நன்று;

சடுதியிற் பக்குவம் சொல்லுங்கொடைக்கிங்கு
    சற்றுமில்லை யென்னல் நன்று;
சம்பத்துடன் பிணியின்மெலிகுவதின் நோயற்ற
    தாரித்திரியம் நன்றுகாண்;
மடுவினிற்கரியோல மென்னவந்தருள்செய்த
    மான்மருகனுன முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
    மலைமேவு குமரேசனே!

3. சடலமொன்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று
    தன்பேர் விளங்கவேண்டும்;
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானியென்றவ
    தரிக்கவே வேண்டும்; அல்லால்,
திடமினியரணசூர வீரனிவனென்னவே
    திசைமெச்ச வேண்டும்; அல்லால்
தேகியெனவருபவர்க் கில்லையென்னுமலே
    செய்யவே வேண்டும்; அல்லால்,
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவான்
    ஆகவே வேண்டும்; அல்லால்,
அறிவான துரைமக்க ளாக வரவேண்டும்;—இவர்
    அதிக பூபாலரையா!
வடகுவடு கிடுகிடென வெழுகடலும் அலையெறிய
    மணி*யுரகன் முடிகள்நெரிய,
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
    மலைமேவு குமரேசனே!

---

*உரகன்—ஆதிசேஷன்.

4. சேற்றிற் பிறந்திடுங் கமலமலர்
 கடவுளது திருமுடியின் மேலிருக்கும் ;
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசாது
 தேகத்தின் மேலிருக்கும் ;
போற்றியிடுபூச்சியின் வாயினால் பட்டென்று
 பூஜைக்கு நேசமாகும் ;
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
 புனித வபி ஷேகமாகும் ;
சாற்றிய புலாலோடு பிறந்த கோரோசனை
 ஜவாதுபுனுக னைவர்க்குமாம் ;
சாதியீனத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
 சபையின்மேல் வட்டமன்றோ ?
*மாற்றிச்சுரத்தினை விபூதியா லுடல் குளிர
 வைத்தமெய்ஞ் ஞான முதலே !
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயனீடு
 மலைமேவு குமரேசனே !

## 3. திருவேங்கட சதகம்.

1. தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
 சன்னச் சம்பாவாகுமோ ?
சந்தத மும்வாடாதிருந்தாலும் எட்டிமலர்
 ஜாதிமல்லிகை யாகுமோ ?
கடலெலா நிறைற்வெள்ள மாயினுஞ்சுவைபெற்ற
 காவிரியி னூற்றாகுமோ ?
காகங்கள்கோடி தொனிசெய்தாலும் ஒருசிறு
 கருங்குயிற் றொனியாகுமோ ?

---

*கூன் பாண்டியன் சுரத்தை விபூதியால் தணித்த ஞான சம்பந்தர் சுப்பிரமணியருடைய அம்சம்.

படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழம் முந்திரிப்
 பழமதற் கிணையாகுமோ ?
பகர்கின்றஜாதியும் கனவயது மேன்மையும்
 பலகூட்டமுந் தேகமார்
வடிவதிகமன்று ; நற்குணமதிக மென்பர்காண் ;
 மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே !
 வரதவேங்கட ராயனே !

2. காட்டிலிண்டஞ் செடிதழைத்தென்ன, காஞ்சிரங்
 கனியது சிவக்கிலென்ன,
கரைநாணலெல்லா மலர்ந்தென்ன, காகங்
 கழுத்திடை வெளுக்கிலென்ன,
ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்ன, நீர்ப்பாசி
 அது பச்சையாகிலென்ன,
அற்பருக் கதிகாரம் வந்தென்ன, பேடிகையில்
 ஆயுத மிருந்துமென்ன,
நீட்டமொடு காடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன,
 நீதியறியாத மூடர்
நிறைசெல்வ ராயென்ன, ஞானமில்லாக்கல்வி
 நிலைபோலிருக்கு மென்பார் ;
வாட்டடங் கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்ணனே
 மணவாள...............................ராயனே !

3. பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
 பெரியோரை முனிதல் வேண்டாம்;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
 பேர்கொண்டு திரிதல்வேண்டாம் ;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
 ஒருநாளும் நம்பல்வேண்டாம் ;

ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல் வேண்டாம் ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கவேண்டாம்,
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னினும்
தன்னையே புகழ்தல் வேண்டாம் ;
மற்றொன் றுமெண்ணுது செய்யல்வேண் டாமென்பர் ;
மணவாள............ராயனே.

---

## 4. வேதநாயகம் பிள்ளை ஸமரஸக் கீர்த்தனைகள்.

---

### (1) ராகம்-காபி, தாளம்-ரூபகம்.

(பல்லவி.)

நாளே நல்ல நாள்—புண்ணியஞ் செய்யும். (நாளே)

(அனுபல்லவி.)

ஆளும் வேத நாயகன் தாளிணை பூஜிக்கும். (நாளே)

(சரணம்.)

1. பாபமில் லாதகால க்ஷேபமும் ஸஜ்ஜனஸல்
லாபமு மேபர—லாபமாகக் கொள்ளும் (நாளே)
2. வேதமும் பெரியவர் போதமும் தேவஸங்-
கீதமும் முதலான நாதங்களுடன் செல்லும் (நாளே)
3. ஞானமும் ஜீவாபி மானமும் பரன்பதத்
தியானமு மேசெய்து மோன நிலையில் நிற்கும் (நாளே)
4. பத்தினி சுதர்குடும் பத்தவர் யாவரும்
சித்தநிர் மலத்துடன் பத்தி புரிந்திடும் (நாளே)
5. கூனர் குருடர் அங்க ஈனர் பிணியுடையார்
தீனர் முதலியோர்க்குத் தானதருமம் செய்யும் (நாளே)

## (2) இந்துஸ்தானம்-காபி ஆதிதாளம்.

(பல்லவி)

நித்தியானந்தத்தை நாடு—பர
நிர்மல சுகந்தேடு, மனமே! (நித்)

(அநுபல்லவி)

சத்திய மார்க்கந் தன்னிலே கூடு ;
சற்சன சங்கத்துடனுற வாடு (நித்)

178027

(சரணம்)

இந்திரஜாலம் உலகவைபோகம் ;
இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம் ;
அந்தர மின்னல் போல அழியும் தேகம் ;
ஐயோ அதனுடன் உனக்கேன் சிநேகம் (நித்)

தன தானிய முதலான சம்பத்து ;
சாசுவதமோ அதற்கு ஆயிரம் தத்து ;
தினமும் கவலை விளைத்திடும் வித்து ;
சீச்சீ அதனை விரும்பல் விபத்து (நித்)

மெய்யே, ஒன்றுக்கும் உதவாப் பாண்டம் ;
மிருகாதிகள் சூழ் மாமிசப் பிண்டம்.
பொய்யோ இதற்கிங்கு நித்திய கண்டம்.
புண்ணியம் செய்யுனக் காயிரம் தண்டம் (நித்)

காண்பதெல்லாம் நிலையல்ல ; அநித்தியம் ;
காயம் இறந்திடவேண்டும் அகத்தியம்
வீண்பொருள் மீதுனக் கென்ன பைத்தியம்.
வேத நாயகன் சொல்லே சத்தியம். (நித்)

---

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.